# உதயன்

சுடர் : 36 கதிர் : 302 | புதன்கிழமை | புரட்டாதி 13 ஆம் நாள் 29 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## தொற்று 932 சாவு 55

கொழும்பு, செப். 29
இலங்கையில் மேலும் 55 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல்

15

சொன்னதைச் செய்யாததால்

# ஜி.எஸ்.பி.+ வரிச்சலுகையை இலங்கைக்கு வழங்கவேண்டாம்

### ஐரோப்பியக் குழுவிடம் கூட்டமைப்பு கோரிக்கை



கொழும்பு, செப்ரெம்பர் 29
இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதன் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக சலுகையைப் பெறுவதற்கான தரநிலைகள் பலதை இலங்கை இன்னமும் பூர்த்தி செய்யவில்லை. இலங்கையின் தரநிலை மேம்படாத நிலையில், 'ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்கக்கூடாதென ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதை நீங்கள் மிகத் தீவிரமாகக் கணக்கில் எடுக்கவேண்டும்.

15

கோம்பயன்மணல் மயான

## மின்தகனத்துக்கு கட்டண மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 29
யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கோம்பயன்மணல் மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்படும் சடலங்களுக்கான கட்ட

15



## நாவற்குழியில் வீடு புகுந்து ஆயுததாரிகள் அட்டகாசம்

*மூவருக்குக் காயம், வேலி, கதவு, ஜன்னல்கள் நாசம்*
*அம்புலன்ஸை நொருக்குவோமென எச்சரிக்கை*

கொடிகாமம், செப். 29
நாவற்குழியில் வீடு புகுந்த 10 பேர் கொண்ட குழுவொன்று, வீட்டில் இருந்தவர்களைத் தாக்கிக் காயப்படுத்தியதோடு, வீட்டின் கதவு,

15



## நாட்டரிசி 115 ரூபா
## சம்பா 140 ரூபா
## கீரிச்சம்பா 165 ரூபா

*விலையை அறிவித்தது ஆலை உரிமையாளர் சங்கம்*

கொழும்பு, செப். 29
அரிசி வகைகள் மீது விதிக்கப்பட்டிருந்த அதிகபட்ச நிர்ணய விலை நீக்கப்பட்டதன் பின்னர், அரிசி விலை

15

மாமன், மருமகன் வீடுகளில்

## 31 பவுண் நகை, பணம் ஒரே இரவில் கொள்ளை

கிளிநொச்சி, செப்.29
தருமபுரம், கல்மடுநகரில் மூன்று வீடுகளுக்குள் புகுந்து நகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்

15



## முன்னாள் போராளி கைது!

*கைக்குண்டு மீட்புடன் தொடர்பு என்கிறது பொலிஸ்*

கொழும்பு, செப். 29
கொழும்பு, நாராஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனை வளாகத்திலிருந்து கைக்குண்டொன்று மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். திருகோணமலை உப்புவெளி பகுதியைச் சேர்ந்த 40 வயது

12

## சிகரெட் மீதான வரியை அதிகரிக்காதது ஏன்?

*பிரதமருக்கு செல்வம் எம்.பி கடிதம்*

மன்னார், செப். 29
அத்தியாவசியப் பெர்ருள்களுக்கான வரியை அரசு அதிகரிக்கும் போது, சிகரெட் மீதான

15

## மாநகர சபை அமர்வில் திலீபனுக்கு அஞ்சலி

*பொலிஸாருக்குக் கண்டனம்*

யாழ்ப்பாணம், செப். 29
யாழ்ப்பாண மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட அதேவேளை, அஞ்சலி நடவடிக்கையில் பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு எதி

12

## அத்தியாவசியப் பொருள்களுக்கு இனி வடக்கில் தட்டுப்பாடில்லை

- கூ. சங்கங்கள் கடனடிப்படையில் பொருள் கொள்வனவுக்கு அனுமதி
- கூ.அபிவிருத்தி ஆணையாளர் தகவல்



யாழ்ப்பாணம், செப். 29
வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில், கடனடிப்படையில் கொள்வனவு

12

## 2 வாள்களுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 29
அச்சுவேலிப் பகுதியில் 2 வாள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி, நேற்று

12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அரசு மறைத்தாலும் அரிசிக்கு தட்டுப்பாடே

## நுகர்வோர் விசனம்

கொழும்பு.செப்.29

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை என்று அரசு அறிவித்திருந்தாலும், சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பில் அவசரகால விதிமுறைகளை அரசு அறிவித்துள்ளபோதிலும், கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல்பொருள் அங்காடிகளில் கீரிச்சம்பா, சம்பா போன்ற அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் சிவப்பு நாட்டரிசி போதியளவில் காணப்படுகின்றது.

இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்மதி அரிசியும் தாராளமாகக் காணப்படுகின்றது. ஆனால் உள்ளூர் பாஸ்மதிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆனால் சந்தையில் அரிசிக்குத் தட்டுப்பாடு இல்லை என்று வர்த்தக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நெல் சந்தைப்படுத்தும் சபை நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. அதனால் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லை விவசாயிகளிடமிருந்து அதிக விலைக்குக் கொள்வனவு செய்கின்றனர். தற்போதைக்கு அரிசியும், நெல்லும் தாரளாமாகக் கிடைக்கின்றன. ஆனால் அரிசி ஆலை உரிமையாளர்கள் அதிக விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர். இது உற்பத்திச் செலவை அதிகரிக்கின்றது. அதனால் விலை அதிகரிப்பும், தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# நள்ளிரவு பூண்டு கொள்ளை மனோ வெளியிட்ட தகவல்!



**கொழும்பு, செப்.29**

**குறைந்த விலைக்கு வெள்ளைப் பூண்டு கொள்கலனை விற்பனை செய்த சதொச நிறுவனம், மீண்டும் அதிக விலை கொடுத்து அந்தக் கொள்கலனைக் கொள்வனவு செய்தது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.**

அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தப் பதிவில் உள்ளதாவது:

டொலர் பிரச்சினையால், துறைமுகத்தில் தேங்கி இருக்கும், இறக்குமதி செய்யப்பட்ட, உணவு பொருள்களை, அரசாங்கமே பொறுப்பெடுத்து, நாட்டுக்குள் கொண்டு வந்து, பொதுமக்களுக்கு, மலிவான விலையில் கொடுங்கள் என "சதொச" என்ற அரச நிறுவனத்துக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ச பணிப்புரை விடுத்தாராம். ஆகவே துறைமுகத்தில் இருந்த ஒரு வெள்ளைப்பூண்டு கொள்கலனை "சதொச"வின் களஞ்சியசாலைக்கு கொண்டு வந்தார்களாம். அப்புறம் நடந்ததுதான் சுவாரசியம்..!

"சதொச"வின் ராகம களஞ்சியசாலைக்கு வந்த, அந்த வெள்ளைப் பூண்டு கொள்கலன் அப்படியே நள்ளிரவில், "பில்" கூட போடாமல், ஒரு தனியார் நிறுவனத்துக்கு, கிலோ 145 ரூபா என்ற கணக்கில் கொடுக்கப்படுகிறது. அதன் பின் நிகழ்ந்தது, அதைவிட மகா சுவாரஸ்யம்..!

இப்படி நள்ளிரவில் கொடுக்கபட்ட அதே வெள்ளைப்பூண்டு கொள்கலனை, அதே "சதொச" நிறுவனம், கிலோ 445/= கணக்கில் மீண்டும் வாங்குகிறது. அதன் பின் அது கிலோ 500/= மேல் அப்பாவி வாடிக்கையாளர் பொதுமக்களுக்கு நாடு முழுக்க உள்ள "சதொச" முகவர் நிலையங்கள் மூலம் விற்கப்படுகிறது. இதுதான், "நள்ளிரவு வெள்ளைப்பூண்டு கொள்ளை".

இப்படியே இதற்கு முன்னும் சீனி, பால்மா, மாவு, உளுந்து ஆகிய கொள்கலன்கள் விற்கப்பட்டன என்றும், இப்போது இந்த நடு ராத்திரி கொள்ளைக்கு துணை போக முடியாமல், மனம் நொந்து, இந்த நாட்டை காப்பாற்ற வந்த தேசிய வீரர்களின் நிர்வாகத்தில் இருந்து, பதவி விலகும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நிர்வாக இயக்குநர் துசான் குணவர்தன கூறுகிறார்- என்றுள்ளது. (எ-இ)

# நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு எதுவுமில்லை

## இறக்குமதிக்கு தேவையான நிதியும் கைவசம் உள்ளது என்கிறது அரசு

கொழும்பு, செப்.29

நாட்டில் எரிபொருளுக்கு எவ்விதத் தட்டுப்பாடும் இல்லை. இறக்குமதி செய்வதற்கான நிதியும் கைவசம் உள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் நடைபெற்றது. டொலர் நெருக்கடியால் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், அதனால் முதலாம் திகதி ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படாது எனவும் வெளியிடப்பட்டுள்ள கருத்துகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை வெளிப்படையான காரணியாகும். எனினும், நாட்டில் எரிபொருளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை. தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதியும் உள்ளது. இது தொடர்பில் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டியதில்லை. என்றார். (எ-44)



# வாகன இறக்குமதி தொடர்பில் இன்னும் இறுதி முடிவு இல்லை

கொழும்பு, செப்.29

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் இன்னும் கொள்கை அடிப்படையில் எவ்வித தீர்மானமும் எட்டப்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை டிசம்பர் மாதம் முதல் கட்டங்கட்டமாக தளர்த்துவதற்கு எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த விவகாரம் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் ஊகமொன்றையே வெளியிட்டார். அதற்கான திட்டம் அவரிடம் இருக்கக்கூடும். எனினும், இந்தக் காலப்பகுதியில்தான் வாகனம் இறக்குமதிக்கான சட்டம் மாற்றப்படும் என கொள்கை ரீதியில் இன்னும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை-என்றார். (எ-44)



# ஒக்ரோபர் மாதம் முதல் புதுயுகத்துக்குள் நாடு!

## எதிர்பார்க்கின்றது அரசு

கொழும்பு, செப்.29

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை ஒக்ரோபர் முதலாம் திகதி தளர்த்த முடியுமா என்பது தொடர்பில் அடுத்த கொரோனா செயலணிக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும். எனினும், ஒக்ரோபர் மாதம் முதல் புது யுகத்துக்குள் காலடி வைக்க முடியும் என நம்புகின்றோம் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எதிர்வரும் முதலாம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுமா என அதில் எழுப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒக்ரோபர் முதலாம் திகதி ஊரடங்குச் சட்டத்தை தளர்த்த வேண்டும் என்பது தான் அரசால் கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமாகும். எனினும், அடுத்த கொரோனா ஒழிப்பு செயலணிக் கூட்டத்தில் இது தொடர்பில் இறுதி முடிவு எட்டப்படும். 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டு இரு வாரங்களின் பின்னர் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கின்றது. தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. உயிரிழப்பு எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே ஒக்ரோபர் மாதம் முதல் புது யுகத்துக்குள் காலடி வைக்க முடியும் என நம்புகின்றோம். என்றார்.

அதேவேளை, ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் சகல அரச மற்றும் தனியார் ஊழியர்களை வேலைக்கு அமைப்பது தொடர்பில் இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் செலவு இன்னும் அதிகரிக்கும்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, செப்.29**

**நாட்டில் வாழ்க்கைச் செலவு அடுத்த சில வாரங்களில் அதிகரிக்கப் போகின்றது என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது

இறக்குமதிகளுக்குச் செலுத்துவதற்கான டொலரைப் பெற்றுக் கொள்வதில் வர்த்தகர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். அதனால் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும்.

சர்வதேச சந்தையில் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. அவர் பால்மா உள்நாட்டு எரிவாயு, கோதுமை மா உட்பட பல பொருள்களின் விலைகள் உள்நாட்டில் அதிகரிக்கவுள்ளன.

அமெரிக்க டொலர் தொடர்பில் நாங்கள் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம் என்பதை மறைக்க விரும்பவில்லை. சர்வதேச சந்தையிலும் விலைகள் அதிகரிக்கின்ற நிலையில் சலுகைகளை வழங்கமுடியாதுள்ளது.

பிரதமர் நிதியமைச்சரை நிகழ்வழி சந்திப்பொன்றின் மூலம் தொடர்பு கொண்ட இறக்குமதியாளர்களிடம் விலை அதிகரிப்பு குறித்து செவ்வாய்க்கிழமை தெரிவிப்போம் என்றார். (எ-இ)

# ஐரோப்பிய குழுவுடன் மு.காவும் சந்திப்பு



கொழும்பு, செப். 29

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக்குழுவினர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நேற்று முக்கிய பேச்சு நடத்தினர்.

கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மு.காவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ரவூப் ஹக்கீமிடம் இதன் போது ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக்குழுவினர் கேட்டறிந்தனர். (கு-22)

# யார் விலகினும் ஆட்சி கவிழாது

## பிரதமர் மஹிந்த இறுமாப்பு



கொழும்பு, செப். 29

யார் விலகினாலும் ஆட்சி கவிழாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். பங்காளிக் கட்சிகளின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே மஹிந்த ராஜபக்ச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இணைந்துள்ள சிறிய அரசியல் கட்சிகளுக்கு அரசாங்கத்தில் இருந்து விலகும் நோக்கம் இருந்தால், எந்த நேரத்திலும் அவர்கள் அந்தத் தீர்மானத்தை எடுக்கமுடியும். அவர்களுக்கு அரசாங்கத்தில் இருந்து விலகும் தேவை இருந்தால், அவர்களை பலவந்தமாக வைத்திருக்கும் எந்த தேவையும் எனக்கில்லை. யார் அரசாங்கத்தை விட்டு விலகினாலும் அரசாங்கம் கவிழாது. சிறிய கட்சிகள் அரசாங்கத்தில் இருந்து விலகிவிடும் என்று எதிர்க்கட்சிகள் கனவு காண்கின்றன. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை தவறான கண்ணோட்டத்திலேயே பார்க்கின்றனர். உலக சந்தையின் தற்போதைய நிலைமைக்கு அமைய பல நாடுகளில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது. கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்த நிலைமையை எமது நாடும் எதிர்நோக்க நேரிட்டுள்ளது. இப்படியான சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்திருக்குமாயின் இலங்கையின் நிலைமையானது இதனைவிட மிக மோசமாக இருந்திருக்கும் என்றார். (ம)

# பாதிக்கப்பட்டவர்களது குரலை கேட்க வேண்டும் ஐ. ஒன்றியம்!

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

வவுனியா, செப்.29

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்களின் பேச்சைக் கேட்க வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தங்கள் உறவுகளை விடுதலை செய்ய வலியுறுத்தி வவுனியாவில் கடந்த ஆயிரத்து 645 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் இங்கு இருக்கும்போது, அவர்கள் தமிழர்களின் பேச்சைக் கேட்க வேண்டும். தமிழர்களுக்கான அரசியல்தீர்வு மாத்திரமே தீவின் முழுப் பிரச்சினையையும் தீர்க்கும் என்பதை நாங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தொடர்ந்து சொல்ல விரும்புகிறோம். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதில் மட்டும் ஐரோப்பிய ஒன்றியம் கவனம் செலுத்தக்கூடாது. இணைத்தலைவர்களுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான தார்மீகப் பொறுப்பை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ளது. தமிழ் அரசியல்வாதிகளை நாங்கள் நம்பவில்லை. குறிப்பாக சம்பந்தன் மற்றும் சுமந்திரன் தமிழர்களின் குரலை பிரதிநிதித்துவப் படுத்தமாட்டார்கள்- என்றனர். (எ-110)



# மதுபோதையில் அட்டகாசம் மேல் வெடி வைத்துக் கைது!

## கோண்டாவிலில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் மது போதையில் அட்டகாசம் புரிந்த நபரை துப்பாக்கி வேட்டுத் தீர்த்து பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

கோண்டாவில் செபஸ்ரியன் வீதியில் உள்ள வீடொன்றில் மதுபோதையில் இளைஞன் தாய் மீதும், வீட்டில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்தி அட்டகாசம் புரிந்துள்ளார்.

இது தொடர்பில் அயலவர்கள் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அந்த இளைஞனைக் கைதுசெய்ய முயன்றனர். ஆனால் அந்த இளைஞன் வீட்டில் இருந்த வாள் ஒன்றை கையில் எடுத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயன்றுள்ளார்.

அதையடுத்து பொலிஸார் வானத்தை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்து இளைஞனை மடக்கிப் பிடித்துள்ளனர். இளைஞனிடம் இருந்த வாளையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-20)

# கெருடாவிலில் வீடு புகுந்து தாக்குதல் நடத்தி கொள்ளை

சாவகச்சேரி, செப்.29

வாகனம் ஒன்றில் வந்தவர்கள் வீடொன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திவிட்டு, வீட்டிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பணம் மற்றும் அலைபேசி என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி, கெருடாவில் வடக்கில் நடந்துள்ளது.

இரு வாகனங்களில் வந்தவர்கள் போத்தல்கள், கற்கள், இரும்புக் கம்பிகள் என்பவற்றைக் கொண்டு வீட்டின் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். வீட்டில் இருந்த பொருள்கள், வீட்டு வேலி என்பன அந்தக் கும்பலால் அழிக்கப்பட்டுள்ளன. சுமார் 25 பேர் கொண்ட கும்பல் தாக்குதல் நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்த வயோதிபர்கள் பின்வழியாக தப்பிச் சென்ற நிலையில், வீட்டில் இருந்த பணம், அலைபேசி என்பன அந்தக் கும்பலால் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இந்தத் தம்பதியின் மகன் வடமராட்சிப் பகுதியில் திருமணம் செய்து குடும்பப் பிரச்சினை காரணமாக தற்போது மனைவியைப் பிரிந்து வாழ்கின்றார். மனைவியின் உறவினர்களே இரு வாகனங்களில் வந்து தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடுத் தேவாலயத்துக்கான காணியில்

# குத்தகையின் அடிப்படையிலேயே விவசாயம் மேற்கொள்ளப்பட்டது!

அன்ரனி சோசை அடிகளார் தெரிவிப்பு

**மன்னார், செப். 29**

**மடு தேவாலயத்துக்கான 50 ஏக்கர் விவசாயக் காணியில் 27 விவசாயிகளால் குத்தகை அடிப்படையிலேயே இவ்வளவு காலமும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.**



என்று அருட்தந்தை இ. அன்ரனி சோசை அடிகளார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மடு கோயில்மோட்டை விவசாயக் காணி தொடர்பாக அண்மையில் காணி ஆணையாளர் தலைமையில் மடு பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் அடிப்படையில் காணி ஆணையாளர் நாயகம் அனைவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டதன் பிற்பாடு அவர் வழங்கிய தீர்மானத்தின்படி இவ்வருடம் கடந்த வருடத்தைப் போன்று மடு பரிபாலகரினால் அவ்விடத்தில் 5 ஏக்கர் காணியில் விவசாயம் செய்யப்படவும், ஏனைய காணிகளில் ஏனைய விவசாயிகள் மேற்கொண்டு வந்தது போன்று 2 ஏக்கர் வீதம் விவசாயிகளுக்கு பிரித்துக் கொடுக்கவும் அதிகாரிகளுக்கு பணித்தார்.

இந்த நிலையில் விவசாய உத்தியோகத்தரினால் மடு தேவாலயத்துக்கு இந்தக் காலபோகத்தில் விவசாயம் மேற்கொள்ள வேண்டிய காணியை காட்டியதன் பிற்பாடு மடு பரிபாலகர் தனது வேலையாள்களை அனுப்பி குறித்த விவசாயக் காணியில் 2 தடவைகள் உழுதுள்ளார்.

பின்னர் கடந்த ஒரு வாரத்தில் நாங்கள் குறித்த காணிக்குச் சென்று உழுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஏனைய விவசாயிகள் குறித்த காணிக்குள் செல்லக்கூடாது. அது உங்கள் காணி இல்லை என அவர்கள் தற்போது கூறிவருகின்றனர். ஆனால் காணி ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக நாங்கள் குறித்த காணியில் இந்தக் காலபோகத்திலே விவசாயம் செய்ய வேண்டும்.

நாங்கள் 5 ஏக்கர் காணியில் மேற்கொண்டுவரும் விவசாயத்தில் கிடைக்கும் பணத்தை மடு தேவாலயத்தின் அபிவிருத்தி பணிக்காகவும், பிறர் நல சேவைக்காகவும் சிறுவர் காப்பகங்களில் உள்ள தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் பயன்படுத்தி வருகிறோம்.

ஏற்கனவே காணி ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக தற்போது குறித்த விவசாயக் காணியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் 27 பேரும் தங்களது காலபோக பயிர்ச்செய்கையின் பிற்பாடு, மடு தேவாலயத்திற்கு குத்தகையை செலுத்த வேண்டும் என காணி ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். குத்தகை மூலம் கிடைக்கின்ற நிதியைக்கூட பொதுப் பணிகளுக்குத்தான் செலவு செய்து வருகின்றோம்.

மேலும் குறித்த 27 விவசாயிகளும் தங்களது கையினால் எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையில் மடு தேவாலயத்துக்குச் சொந்தமான கோயில்மோட்டையில் உள்ள வயல் காணியை விவசாய செய்கைக்கு குத்தகைக்கு தந்து உதவும்படியும், குத்தகையாக ஒரு காணிக்கு ஒரு மூடை நெல் கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்குவதாகவும், தங்களின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடப்போம் எனவும் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியுள்ளனர் என்றார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட காணி பொறுப்பாளர் அருட்பணி இ.அன்ரனி சோசை அடிகளார் மடுத்திருத்தல முன்னைநாள் பரிபாலகர் பி.எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் ஆகியோரும் குறித்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-56)

# இரு டிப்பர்களுடன் சாரதிகள் கைது

கிளிநொச்சி, செப்.29

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றினர் என்ற குற்றச்சாட்டில், இரண்டு டிப்பர்களுடன், அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மகேணி மற்றும் கரந்தாய் பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியமை மற்றும் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் கொண்டு சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் இருவரும் கைது செய்யப்பட்டனர். சாரதிகள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட சான்றுப் பொருள்களுடன், சாரதிகளும் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-4-6)

# போரால் வீழ்த்தப்பட்டோருக்காக பாடுபட்டவர் வர்ணராமேஸ்வரன்

**நெய்தல், நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை இரங்கல்**

கொழும்பு, செப். 29



"வெறும் வாய்ச் சொல் வீரர்கள் போலன்றி தாயகத்தில் போரால் வீழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களின் வாழ்வியலை கட்டியெழுப்புவதன் மூலமே அவர்களின் கனவுகளை மெய்ப்பிக்கலாமென்று செயற்பட்டவர் வர்ண இராமேஸ்வரன்" என்று, வடக்கு மாகாணத்தின் முன்னணி ஆடைத் தொழிற்சாலையான இலங்கை நெய்தல், நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை தெரிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றின் மத்தியில் தாயகத்தில் தங்கியிருந்த ஈழப்பாடகன் வர்ண இராமேஸ்வரன் வெறுமனே வீட்டினுள் முடங்கியிருக்கவில்லை. வடமராட்சியின் வல்லையில் இயங்கிவரும் இலங்கை நெய்தல் நூற்றல் ஆலையை மேலும் மேம்படுத்தி நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதே வர்ணஇராமேஸ்வரனது நோக்கமாகவிருந்தது. கொரோனாத் தொற்றால் ஆலை முடங்கிவிடாதிருக்க நாள்தோறும் பயணித்த இராமேஸ்வரன் பணியாளர்களுக்கு நம்பிக்கையூட்ட நாள் கணக்கில் தங்கியிருந்து ஆலோசனைகளை வழங்கினார் என்பதை இலங்கை நெய்தல், நூற்றல் ஆலை பணிப்பாளர் சபை நன்றியுடன் நினைவுகூருகின்றது.

இலாப நோக்கற்ற ஆலையை வலுப்படுத்தவும் இலாபத்தை பணியாளர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமெனவும் இராமேஸ்வரன் முன்னின்று பாடுபட்டிருந்தார். தாயகத்திலுள்ள தனது வயோதிப தாயாரை ஒருபுறம் பாதுகாத்தவாறு கலைகளுக்கான கல்விநிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் கட்டியெழுப்பிக்கொண்டிருந்த அவர் கனடாவிலுள்ள தனது குடும்பத்தை மீண்டும் தாயகம் அழைத்துவரவும் ஆர்வம் கொண்டிருந்தார். ஆனாலும் விதி வலியது. கனவுடன் கனடாவுக்குள் தரையிறங்கிய ஈழப்பாடகனை பெருந்தொற்று பலியாக்கிவிட்டது.

ஈழத்தின் வாழ்வியலுடன் பிரிக்க முடியாத கானங்களை தந்த ஈழப்பாடகன் நம்மிடம் உயிரோடு தற்போதில்லை. ஈழப்பாடகன் வர்ணஇராமேஸ்வரனின் கனவுகள் மெய்ப்பிக்கப்படவேண்டும்.

என்று இலங்கை நெய்தல், நூற்றல் ஆலைப் பணிப்பாளர் சபை விடுத்துள்ள நினைவஞ்சலிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# புல் வெட்டும் இயந்திரத்தில் சிக்கிய குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, செப்.29

தந்தை இயக்கிய புல் வெட்டும் இயந்திரத்தில் சிக்கி, 3 வயதுக் குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் பள்ளம, சேருகெலப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தந்தை புல் வெட்டிக் கொண்டிருந்த இடத்துக்கு திடீரென வந்த குழந்தை, இயந்திரத்தில் சிக்குண்டு படுகாயமடைந்தது.

படுகாயமடைந்த குழந்தை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளது. சம்பவம் தொடர்பில் இயந்திரத்தைச் செலுத்திய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

பள்ளம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

# முகமாலை ஆ.பாடசாலை கதவு உடைத்துத் திருட்டு!

கிளிநொச்சி, செப்.29

முகமாலை ஆரம்பப் பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறிகள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்டு மீள் சீரமைப்புச் செய்யப்பட்டிருந்த இந்தப் பாடசாலையில் தரம் 5க்கு உட்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். பாடசாலை வகுப்பறைக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த 10 மின்விசிறிகள், சமையல் உபகரணங்கள், சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பாடசாலை அதிபரால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, 6 மாதங்களின் முன்னர் பாடசாலைக் கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த மின்மோட்டரும் திருட்டுப் போயிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளப் பிரச்சினை தீரும்வரை கற்பித்தலில் ஈடுபடமாட்டோம்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 29**

**யார் பாடசாலைகளைத் திறந்தாலும், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தீரும்வரை அவர்கள் கற்பித்தல் செயற்பாட்டில் பங்கேற்க மாட்டார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**




அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளர் மீண்டும் வேலை செய்யச் சொல்கிறார்? அவரது நகைச்சுவைகளை யார் ஏற்றுக்கொள்வார்கள்? உடனடியாக இந்த நகைச்சுவைகளை நிறுத்துங்கள். பாடசாலைகளை திறந்து நடைமுறை ஆய்வுகளை நடத்துவதற்கு முன்பு என்ன செய்ய வேண்டும்? முதலில் எமது பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொடுங்கள். பாடசாலைகள் தொடங்குவதற்கு முன்பு கல்வி அதிகாரிகள் முறையான முடிவை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன் என்றார். (ம)

# ரூ.20 லட்சம் செலவில் நவீன சொகுசுக்கட்டில்

## சர்ச்சையில் சிக்கினார் எம்.பி.

கொழும்பு,செப்.29

சுமார் 20 லட்சம் ரூபா செலவில் நவீன சொகுசுக்கட்டில் ஒன்றைக் கொள்வனவு செய்து சர்ச்சைக்குள்ளாகியுள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி. ஹேரத்.

இந்தத் தகவலை மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் கருணாரத்ன வெளியிட்டுள்ளார்.

அவர் மோசடியாக சேமித்த பணத்தில் பல மில்லியன் ரூபா செலவில் பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார். அரச செலவில் தனது வீட்டையும் புனரமைப்புச் செய்துள்ளார். அரசின் பணத்தை மோசடி செய்து, அதற்காக சட்டவிரோதமான முறையில் ஆவணங்களையும் தயார் செய்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)



# நுகர்வுக்குப் பொருத்தமற்ற மீன் ரின்கள் சதொசவில்

கொழும்பு,செப்.29

சதொசவுக்கு வழங்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான மீன் ரின்கள் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சதொசவின் தலைவர் ரியர் அட்மிரல் ஆனந்த பீரிஸால் தெரிவிக்கையில்,

மீன் ரின்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்துக்கு(சதொச) இலங்கை துறைமுக அதிகார சபையால் கடந்த ஜுன் மாதம் 7 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டன.

உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரசபை மற்றும் இலங்கை தர நிர்ணய நிறுவனம் ஆகியவற்றின் அனுமதியுடன் இவை வழங்கப்பட்டன.

முன்னதாக தனியார் இறக்குமதியாளரால் இறக்குமதி செய்யப்பட்ட ரின்கள் சதொச நிறுவனத்துக்கு ஏலமின்றி வழங்க அமைச்சரவை முடிவு செய்தது. 225 ரூபா விலையுள்ள ரின் மீன் ஒன்று சதொசவுக்கு 325 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

பணம் செலுத்தாதது குறித்து இலங்கை துறைமுக அதிகார சபை பல சந்தர்ப்பங்களில் சதொசவுக்கு அறிவித்துள்ள போதிலும், இதுவரை பணம் செலுத்தப்படவில்லை.

கொள்வனவு செய்யப்பட்ட மீன் ரின்கள் நுகர்வுக்குப் பொருத்தமற்றவை என்று முறைப்பாடு கிடைத்துள்ளது. அதனால் அவற்றின் விற்பனை நிறுத்தப்பட்டுள்ளது. விற்பனை செய்யப்பட்ட மீன் ரின்களுக்கு மட்டுமே துறைமுக அதிகார சபைக்கு நிதி செலுத்த வேண்டும் என்று வர்த்தக அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது - என்றார். (4)

# ஞானசாரதேரரின் கருத்துக்கள் இரத்தக்களரியை ஏற்படுத்தும்!

## இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

இலங்கையில் மீண்டுமொரு இரத்தக் களரியை ஏற்படுத்தும் நோக்கிலா, கலகொட அத்தே ஞானசார தேரர், அல்லாவை விமர்சித்து கருத்து வெளியிட்டுள்ளார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் செயலாளர் நாயகம் சுபைதீன் ஹாஜியார் கேள்வி எழுப்பியுள்ளார்.

இஸ்லாமியர்களின் வணக்கத்துக்குரிய இறைவனான அல்லாவை இழிவுபடுத்தினால் அதற்கு எதிராக இஸ்லாமிய இளைஞர்கள் உயிரையும் துச்சமென மதித்துப் போராடுவார்கள் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கருத்து வெளியிட்ட பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் ஞானசார தேரர் 'அடிப்படைவாத தாக்குதல்தாரிகளை உருவாக்கும் சூத்திரதாரி அல்லாவே என தெரிவித்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

**இஸ்லாமியர்களின் வணக்கத்துக்குரிய இறைவனான அல்லாவை இழிவுபடுத்தினால் அதற்கு எதிராக இஸ்லாமிய இளைஞர்கள் உயிரையும் துச்சமென மதித்து போராடுவார்கள்**

இந்த நிலையில், இந்தக் கருத்து தொடர்பில் விசாரணை நடத்தி தேரர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தென்மராட்சியில் கொரோனா பூச்சியம்

சாவகச்சேரி,செப்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் கொரோனாவின் தாக்கம் கடந்த ஒரு வாரமாகக் குறைவடைந்துள்ளது. நேற்று எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்றுக் காலை தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 13 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. அதேவேளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 985 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4,9)

# தடுப்பூசிக்கு எதிரான பரப்புரை வர்த்தக நோக்கம் கொண்டது

## மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.29

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பூசிக்கு எதிராக உருவாகிவரும் இயக்கங்களின் பின்னணியில் வர்த்தக நோக்கங்கள் உள்ளன. வர்த்தக நோக்கத்துடனேயே இணையத்தளங்கள் தடுப்பூசிக்கு எதிரான பரப்புரைகளை முன்னெடுக்கின்றன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத் துறையின் பீடாதிபதி பேராசிரியர் மனுஜ வீரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

மருத்துவர் ஒருவர் தொடர்ச்சியாக தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளை சமூக ஊடகங்கள் ஊடாக விமர்சித்து வருகின்றார். அவரது இந்த பிரச்சாரத்தின் பின்னணியில் வர்த்தக நோக்கம் உள்ளது. அவர் இன்னுமொரு கிசிச்சை முறையை ஊக்குவிப்பதற்கான பரப்புரையில் ஈடுபட்டுள்ளார். வேறு சிலரும் இந்த பிரச்சாரத்தின் பின்னால் உள்ளனர்.

சர்ச்சைக்குரிய விடயங்களை வெளியிட்டால் தாங்கள் முன்னணிக்கு வரமுடியும் என்பதால் சமூக ஊடகங்களும் இவற்றை வெளியிடுகின்றன. 20 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அவர்களுக்குத் தடுப்பூசியை வழங்கவேண்டியுள்ளது.

எவரும் தடுப்பூசிக்கு எதிரான பரப்புரையில் ஈடுபட்டு நாட்டின் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை குழப்பவேண்டாம். தடுப்பூசிக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பரப்புரைகள் எந்தவித அடிப்படைகளும் அற்றவை- என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டீசல் கிடைக்காவிட்டால் முடக்கம் நீடிக்கப்படும்!

## எதிர்வு கூறுகிறார் ரணில்



**கொழும்பு, செப்.29**

**ஒக்ரோபர் முதலாம் திகதிக்குள் இலங்கையால் கோரப்பட்ட டீசல் கிடைக்கவில்லை என்றால் ஒக்ரோபர் நடுப்பகுதிவரை முடக்கம் நீடிக்கப்படலாம் என்று முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

சர்வதேச வர்த்தக சபையுடன் ஒன்லைன் கலந்துரையாடலில் பங்கேற்ற போதே முன்னாள் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கையால் டீசலுக்கு பணம் கொடுக்க முடியாததால், நாட்டைத் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று அறிய முடிந்தது. அரசு ஏற்கெனவே டீசலுக்கு பணம் செலுத்தியதால் நாட்டிற்கு டீசல் வரவுள்ளது என்று தெரியவருகின்றது.

ஒக்ரோபர் முதலாம் திகதிக்குள் டீசல் வரவில்லை என்றால், அரசு முடக்கத்தை நீட்டிக்க வேண்டியிருக்கும்.

ஊடக அறிக்கையின்படி, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சரிடம் கடன் திட்டத்தின் மூலம் இலங்கைக்கு எரிபொருள் வழங்கலை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார். ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகள் பொதுவாக அவ்வாறு செய்யாவிட்டாலும், இலங்கை வெளியுறவு அமைச்சரின் கோரிக்கை நிறைவேறும் - என்று நம்புகின்றேன்- என்றார். (எ)

## பெண் விவசாயிகள் தொடர்பில் நாடாளுமன்றக் குழு கவனம்!

கொழும்பு, செப். 29

இலங்கையில் பாலின ஒப்புரவு, சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்புக் கவனம் செலுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழு, இலங்கையில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடல் நடத்தியுள்ளது. இந்தக் குழுவின் கூட்டம் கடந்த 23ஆம் திகதி இணையத்தில் இடம்பெற்றது. அதன்போதே மேற்படி பெண் விவசாயிகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இயற்கை வளங்கள் மற்றும் காணிகளின் உரிமை, சந்தைக்கான அணுகல், நிதிச் சேவைகளுக்கான அணுகல், புதிய தொழில்நுட்பம், குடும்பம் சார்ந்த பராமரிப்புப் பொறுப்புக்கள் உள்ளடங்கலாக ஐந்து பிரதான பிரிவுகளின் கீழ் விவசாயத்துறையில் உள்ள பெண்கள் சவால்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்று கருத்துத் தெரிவித்தவர்கள் சுட்டிக்காட்டினர். இந்த விடயம் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இதில், கருத்துத் தெரிவித்த விசேட குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் வைத்திய கலாநிதி சுதர்ஷினி தெரிவிக்கையில், ஒட்டுமொத்த விவசாயத் துறையிலும் பொதுவான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்தக் கலந்துரையாடலின் மூலம் விசேடமாகப் பெண்களுக்குக் காணப்படும் பிரச்சினைகளை அறிந்துகொள்ள முடிந்துள்ளது. எனவே, இந்த விடயம் தொடர்பில் விசேட குழு கவனம் செலுத்துவதாகவும் சுட்டிக்காட்டினார். அத்துடன், 2022ஆம் ஆண்டுக்காக முன்வைக்கப்படவிருக்கும் வரவு-செலவுத்திட்டத்தில் இந்த விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு நிதி அமைச்சுக்குத் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

## ட்ரோன் கமராவுடன் இருவர் கைது

கொழும்பு,செப்.29

அனுமதியின்றி ட்ரோன் கமராவைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் இருவரை மிரிஹான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் இருவரையும் நுகேகொடை வெளிபாக் பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மஹரகம பகுதியை சேர்ந்த 32 மற்றும் 33 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேக நபர்களை கங்கொடவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-இ)

## எண்ணெய் படலம் மிதப்பு அறிக்கை கையளிப்பு



கொழும்பு,செப்.29

தியவன்னா ஓயாவை நோக்கி மிதக்கும் எண்ணெய்ப் படலம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த எண்ணெய்ப் படலம் தொடர்பில் அமைச்சருக்கு கிடைத்த நிழற்படங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இராஜகிரிய முதல் புத்கமுவ பாலம் வரையான பகுதியில் எண்ணெய்ப் படலம் தென்படும் நிலையில், குறித்த அறிக்கையில் அமைச்சருக்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து, எண்ணெய்ப் படலம் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூத்த அதிகாரிகளால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நீரின் மாதிரிகளும் விசாரணை குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ஐ-இ)

## கைதுசெய்ய முயன்ற பொலிஸாரின் கைகளைக் கடித்த சந்தேகநபர்

கொழும்பு,செப்.29

தன்னைக் கைதுசெய்ய முயன்ற பொலிஸ் அதிகாரிகள் இருவரின் கைகளை கடித்துவிட்டு சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறை, கந்தர பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரிகள் இருவரும் தலல்ல மருத்துவமனையில் சேர்கப்பட்டுள்ளனர்.

கொலை வழக்கொன்றின் சாட்சியாளருக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக கடந்த 25 ஆம் திகதி 119 என்ற பொலிஸ் அவசர உதவி இலக்கத்துக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

அங்கு வந்த 7 பேர் கொண்ட குழுவினர் அயலவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய குறித்த சாட்சியாளரின் வீட்டுக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அப்போது, அங்கு வாளுடன் சென்ற சந்தேக நபரை கைது செய்வதற்கு முயற்சித்தபோது, அதற்கு எதிர்ப்பு வெளியிட்டு பொலிஸ் அதிகாரிகளின் கைகளை கடித்துள்ளார். இதனையடுத்து பொலிஸார் சந்தேகநபரை மடக்கிப்பிடித்து கைதுசெய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-இ)

### 60 வயதுக்கு மேற்பட்டோரில்

## சினோபார்ம் தடுப்பூசியை பெற்றவர்களுக்கு மூன்றாவது டோஸாக பைஸரை வழங்கவும்

### சிறப்பு மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,செப்.29

நாட்டைத் திறக்கும் போது சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு மூன்றாவது டோஸாக பைசர் தடுப்பூசியை வழங்குவற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று சிறப்பு மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியால் கிடைக்கும் எதிர்ப்புசக்தி குறைவாக இருப்பதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வின் அடிப்படையில், சினோபாாம் தடுப்பூசி போடப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7 சதவீதமானோருக்கு நோய் எதிர்ப்பு சக்தி இல்லை என்றும் இடைவெளியை நிரப்ப பைஸர் தடுப்பூசியே சிறந்த வழி என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொவிட் தொற்றால் உயிரிழந்தவர்களில் 19 சதவீதம் பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றவர்கள். அத்துடன் அவர்களில் பெரும்பாலோர் சினோபாாம் தடுப்பூசி வழங்கப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்களே - என்றார். (ஐ-இ)

## தொற்றாநோயால் உயிரிழப்போர் அதிகம்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,செப்.29

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களில் 80 சதவீதமானோர் நீரிழிவு மற்றும் உயர் குருதி அழுத்தம் ஆகிய நோய்களுக்கு உள்ளானவர்கள் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட கொரோனா நோயாளர்களில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முழுமையாக குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் கொவிட்19 தொடர்பான இணைப்பு செயலணியின் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - ஓட்டமாவடியில் இதுவரை 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட கொரோனாவால் உயிரிழந்தோரின் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்கூறலுக்கு உள்ளகம் பொருளாதாரத்துக்கு சர்வதேசம்


இலங்கை அரசின் கஜானா கிட்டத்தட்ட காலியாகிவிட்டது. மத்திய வங்கி வாரந்தோறும் பில்லியன் கணக்கான ரூபாக்களை அச்சிட்டு பணவீக்கத்தை அதிகரித்துச் செல்கின்றது. சிம்பாப்வேயில் ஒரு முட்டை ஒருலட்சம் ரூபாவுக்கு விற்பனையானதைப் போன்ற நிலைமை இலங்கையில் ஏற்படும் காலம் வெகுதூரத்தில் இல்லை. இவ்வாறானதொரு இலட்சணத்தில் இலங்கையின் ஏற்றுமதிகளின் பிரதானமான ஆடை உற்பத்தி ஊடான வருவாயையாவது தக்கவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் பிரதான இடம் வகிப்பது ஐரோப்பிய நாடுகள். ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை ஊடாகவே இலங்கை இதுவரை காலமும் தனது பொருளாதாரத்தை கொஞ்சமாவது கொண்டு நடத்தக் கூடியதாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதாக இருந்தால் சில நிபந்தனைகளை இலங்கை நிறைவேற்றியாக வேண்டும். அதில் முக்கியமானது மனித உரிமைகள் விவகாரம். அத்துடன் இலங்கை அரசு வாக்குறுதியளித்த பயங்கரவாத தடைச் சட்டத்தை சர்வதேச தரத்திலானதாக மாற்றியமைத்தல் என்பன உள்ளடங்குகின்றன. இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழு நாட்டுக்கு வந்துள்ளது. அந்தக் குழுவுக்கு இலங்கை அரசு அனுமதியும் வழங்கியுள்ளது. அவர்கள் இலங்கையின் அரச தரப்பினர், எதிர்த் தரப்பினர், சிறுபான்மையினத்தைப் பிரதிநித்துவப்படுத்துபவர்கள் உள்ளிட்ட பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்காக சர்வதேச தலையீட்டுக்கு அனுமதியளிக்கும் இதே இலங்கை அரசுதான், இறுதிக் கட்டப் போரின்போதான பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு உள்ளக விசாரணைகளை நடத்துவோம் என்கின்றது. இலங்கையின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் சரி, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸும் சரி, இலங்கையின் பொறுப்புக் கூறல் இலங்கை நிறுவனங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என்பதை திரும்பத் திரும்பச் சொல்லி வருகின்றனர்.

பொறுப்புக் கூறல் விடயத்தில் வெளியாரின் தலையீட்டை எதிர்க்கும் இலங்கை அரசு, பொருளாதார விவகாரங்களில் வலிந்து சர்வதேசத்தின் உதவியைக் கோருகின்றது. இலங்கையில் முதலீடு செய்யுமாறு புலம் பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுகின்றது. அத்துடன் ஐ.நா. மன்றத்தில் நின்றும் இலங்கையின் பொருளாதார மேம்பாட்டுக்கு சர்வதேச உதவிகள் தேவை என்று அறைகூவல் விடுக்கின்றது.

தங்களின் தேவைக்கான ஒன்று என்றவுடன் சர்வதேசத்தை வலிந்து அழைப்பதும், தமிழ் மக்களின் கோரிக்கையாக, நீதி நிலைநாட்டும் ஆயுதமாக இருப்பதால் பொறுப்புக் கூறல் விவகாரத்தில் சர்வதேசத் தலையீட்டை நிராகரிப்பதுமாக இலங்கை அரசின் இரட்டை வேடம் அமைந்திருக்கின்றது. ஜி.எஸ்.பி. பிளஸ் என்னும் பொருளாதார நலனுக்காக சர்வதேசத் தலையீட்டை இலங்கை அரசு அனுமதித்திருக்கின்றது. பொறுப்புக் கூறல் விவகாரத்திலும் சர்வதேசத் தலையீட்டை இலங்கை அரசை அனுமதிக்க வைப்பதற்கும் பொருளாதாரத்தில் கைவைக்கவேண்டியதே காலத்தின் கடமையாகின்றது.



# கொரோனா அடங்கும்வரை எந்தத் தேர்தலும் வேண்டாம்!

**கொழும்பு,செப்.29**

**கொரோனாத் தொற்று முழுமையாக கட்டுக்குள் வரும்வரை எந்தவொரு தேர்தலும் நடத்தப்படக் கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



தற்போதைய அரசு பதவி விலகி, மக்கள் ஆணையைப் பெறுவதற்காக தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்துள்ள கருத்துக்குப் பதிலாக ரணில் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் பரவல் உள்ள சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவது பொருத்தமா என்று சிந்திக்க வேண்டும். கொரோனாவுக்கு மத்தியில் கனடா பிரதமர் தேர்தலுக்குச் சென்றார். அவர் சிறப்பாக பொருளாதாரத்தை நெறிப்படுத்தினார். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தினார். இதனால் பெரும்பான்மை பலம் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பில் தேர்தலுக்குச் சென்றார். ஆனால் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

கொரோனாவுக்கு மத்தியில் தேர்தல் நடைபெறுவதற்கு அந்த நாட்டு மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

கொரோனா முழுமையாக கட்டுக்குள் வரவில்லை. மீண்டுமொரு சுற்று வரலாம். எனவே, தற்போதைய சூழ்நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை மீட்பதற்குமே நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்விரு விடயங்களையும் சீர் செய்த பின்னர் தேர்தலுக்குச் செல்லலாம் - என்றார். (ஒ-4,44)

# தேர்தல்களை உடனே நடத்தவேண்டும் அரசு

## சஜித் விடாப்பிடி

கொழும்பு, செப்.29

காலம் தாழ்த்தாது உரிய காலத்துக்குள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் தேர்தல்களை அரசு நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அம்பாறை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலை நடத்தினால் அரசு தொடர்பாக மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள முடியுமாக இருக்கும். இந்த நேரத்தில் தேர்தலை நடத்தினால் மக்களின் வேதனைகளைப் புரிந்துகொள்ளமுடியும். இதனால் சர்வதேசத்துக்குச் சென்று தேர்தல் தொடர்பில் பொய்களைக் கூறாது, உரிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசுக்குச் சவால் விடுகின்றேன் - என்றார். (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கலன் தேங்குவதை தடுக்க நிரந்தரத் தீர்வை வழங்குங்கள்!

## இறக்குமதியாளர்கள் கோரிக்கை

**கொழும்பு, செப்.29**

**அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவரும் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்குவதை தடுப்பதற்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை அரசு வழங்கவேண்டும் என்று இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.**

நாட்டில் காணப்படும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சீனி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிவந்த ஆயிரத்து 300இற்கும் அதிகமான கொள்கலன்கள் கொழும்புத்துறைமுகத்தில் தேங்கியுள்ளன நிலையிலேயே இறக்குமதியாளர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக்கிடக்கும் கொள்கலன்களில் 800 கொள்கலன்களில் உணவுப் பொருள்கள் காணப்படுகின்றன என்றும், 400 கொள்கலன்களில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் காணப்படுகின்றன என்றும் சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜி.வி.ரவிபிரிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதியாளர்கள் கட்டணங்களை முழுமையாகச் செலுத்தாது கொள்கலன்களை விடுவிக்க முடியாது. எவ்வாறாயினும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கொள்கலன்களை விடுவிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருந்தார். இதன்படி சீனியை ஏற்றிவந்த 500 கொள்கலன்கள் விடுவிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



# மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்!

முல்லைத்தீவு, செப். 29

முல்லைத்தீவு - நாயாற்றுப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த இளைஞன் படுகாயங்களுக்கு உள்ளானார்.

முல்லைத்தீவு செம்மலை கிழக்கு, நாயாறு பகுதியைச் சேர்ந்த ஏ.கதீஸ்கரன் (வயது 23) என்ற இளைஞரே காயமடைந்தார். செம்மலையிலிருந்து நாயாறுநோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோதே அவர் விபத்துக்கு உள்ளானார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-19)

# 16 கிலோ தங்கம் பறிமுதல்

கொழும்பு,செப்.29

துபாயில் இருந்து மிகவும் சூட்சுமமான முறையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 22 கோடி ரூபா பெறுமதியான 16 கிலோகிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகத்தில் இருவரை இலங்கை சுங்கத் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பிரதி செய்யும் இயந்திரங்களின் பாகங்களுக்குள் தங்கத்தை மறைத்து டுபாயிலிருந்து பொதிகள் சில அனுப்பப்பட்டுள்ளன.

இந்தப் பெரிய அளவிலான தங்கக் கடத்தல் போலி வணிகப் பெயர்களைப் பயன்படுத்தி விமானப் பொதிகள் பிரிவில் உள்ள கொரியர் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டது என்று சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பணிப்பாளருமான சுதத்த சில்வா தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் இந்தப் பொருள்களின் உட்புறத்தில்,தொழில்நுட்ப பாகங்களை தங்கத்தால் செய்து சுங்கத்தை தவறாக வழிநடத்த முயற்சித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)



# இலங்கையில் இதுவரை 7 ஆயிரம் கர்ப்பிணிகள் தொற்றால் பாதிப்பு

கொழும்பு,செப்.29

இலங்கையில் இதுவரை 7 ஆயிரம் கர்ப்பிணிகள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், 55 பேர் உயிரிழந்துள்ளனர் என்று குடும்பநல சுகாதாரப் பிரிவின் பணிப்பாளரும் சமூக மருத்துவ நிபுணருமான மருத்துவர் சித்ரமாலி டீ சில்வா தெரிவித்துள்ளார். அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இதுவரை 90 சதவீதமான கர்ப்பிணிகள் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர். கர்ப்பிணிகளுக்கான தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

இதுவரை 55 கர்ப்பிணிகள் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நிலையில், அனைத்து உயிரிழப்புக்களும் இந்த வருடம் மே மாதத்தின் பின்னரே இடம்பெற்றுள்ளன. அத்துடன் இவ்வாறு உயிரிழந்த அனைத்து கர்ப்பிணிகளும் எவ்வித தடுப்பூசியையும் பெறாதவர்களே. என்றார். (ஐ-இ)



# 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கொடிகாமம்,செப்.29

ஒட்டங்கேணி சனசமூக நிலையம் ஊடாக, பொருண்மியம் நலிவடைந்த 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. 50 குடும்பங்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (4,159)

# நாய்க் கடியால் வருடமொன்றுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு,செப்.29

இலங்கையில் நாய்க் கடியால் வருடமொன்றுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

அத்துடன் 20 தொடக்கம் 30 வரையிலானோர் நீர்வெறுப்பு நோயால் (விசர் நாய்க்கடி) பாதிக்கப்படுகின்றனர். நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக வருடமொன்றுக்கு 600 மில்லியனுக்கும் அதிகமான தொகை அரசாங்கத்தால் செலவிடப்படுகின்றது. 1970 ஆம் ஆண்டுகளில் நீர்வெறுப்பு நோயால் உயிரிழப்பவர்களின்



எண்ணிக்கை வருடமொன்றுக்கு 350 தொடக்கம் 380 வரை இருந்தது. 2014 ஆம் ஆண்டளவில் மிகவும் குறைவாக 19 உயிரிழப்புகள் பதிவாகின. நீர்வெறுப்பு நோயை இலங்கையிலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. நாயொன்று பிறந்த 46 வாரங்களுக்கு இடையில் நீர்வெறுப்பு தடுப்பூசி வழங்கப்படுகின்றது. மூன்று மாதங்களுக்கு பின்னர் மற்றுமொரு தடுப்பூசி வழங்கப்படுகின்றது. நீர்வெறுப்பு தடுப்பூசியை 70 சதவீதம் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனூடாக இலங்கையிலிருந்து 2025 ஆம் ஆண்டளவில் நீர்வெறுப்பு நோயை முற்றாக இல்லாதொழிக்கலாம் என்று எதிர்பாக்கப்படுகிறது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்

**மேடம்:** கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. பொறுமையுடன் இருங்கள். சகோதரர்களால் நன்மை உண்டு. உற்சாகமும் வேகமும் அதிகரிக்கும். வருமானம் உயரும். நன்மையளிக்கும் வாய்ப்புத் தேடிவரும்.

**இடபம்:** பிடித்தவர்களிடம் முகத்தை தூக்கி வைத்துக் கொள்ள வேண்டாம். நண்பர்களுக்கு உதவுவீர்கள். பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். நிம்மதியடைவீர்கள்.

**மிதுனம்:** தான் என்ற அகங்காரம் தலைதூக்காமல் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தினருடன் உற்சாகமான பொழுது போக்குகளில் ஈடுபடுவீர்கள். கவலைகள் அநாவசியமாக வரும்.

**கடகம்:** பலநாள் விரும்பிய வெளிநாட்டு வாய்ப்பு வந்து மகிழ்ச்சி தரும். திடீர் நன்மை கிடைக்கும். செலவுகள் அதிகரிக்கும். நிம்மதி உண்டு. குடும்பத்தினரின் செயற்பாடுகளால் நன்மையும் மகிழ்ச்சியும் வரும்.

**சிம்மம்:** தனிப்பட்ட கவர்ச்சி அதிகரிக்கும். மனதில் காதல் உண்டாகலாம். திடீர் வேலை வாய்ப்பு வரும். உடல்நிலை சீராக இருக்கும். தேவையற்ற விஷயங்களில் மூக்கை நுழைக்க வேண்டாம்.

**கன்னி:** வெளிநாட்டிலிருந்து வேலை வாய்ப்பு/வருமானம்/லாபம் கிடைக்கும். நம்ப வேண்டியவர்களை நம்பாமல் இருப்பது கூடாது. பணிச்சுமை அதிகரிக்கும். கவனமாக இருங்கள்.

**துலாம்:** விளையாட்டாகக் கூடத் தீமையளிக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். சுபநிகழ்ச்சிகள் காரணமாக பிரிந்த குடும்பங்கள் மீண்டும் இணையும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத் துணைக்குப் பிடிக்காத செயல்களைச் செய்ய வேண்டாம். புதிய நட்பால் நன்மையும் லாபமும் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகளால் சந்தோஷம் காண்பீர்கள்.

**தனுசு:** திடீர் செலவு ஏற்படும். எதிர்பாராத வேகத்தில் சுபவிஷயங்கள் நடக்கும். நன்மைகளைப்பெற முனைப்பாக முயற்சி செய்வீர்கள். குடும்பத்தினரை மகிழ்விக்கும் பணியில் ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** வாழ்க்கை மற்றும் எதிர்காலம் பற்றிய வீண் பயம் நீங்கும். நவீனமான வாகனம் வாங்குவீர்கள். புது விஷயங்களில் ஆர்வம் கூடும். நண்பர்கள் உதவுவர்.

**கும்பம்:** பலநாள் கழித்து மனதில் நிம்மதியும் அமைதியும் நிலவும். இளமைக்கால நண்பர்களைப் பார்த்துப் பேசி மனம் நெகிழ்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமும் கோபமும் மாறி மாறி வரும். புதிதாக வருமானம் வரும்.

# இருவேறு தடுப்பூசிகளால் 4 மடங்கு நோயெதிர்ப்பு!

### ஆய்வில் தகவல்




**மொஸ்கோ, செப். 29**

**இருவேறு தடுப்பூசிகளைச் செலுத்துவதால் நான்கு மடங்கு நோயெதிர்ப்புச் சக்தி கிடைக்கும் என்று ரஷ்ய மற்றும் ஐக்கிய அரபு அமீரக விஞ்ஞானிகள் நடத்திய கூட்டு ஆய்வில் தெரியவந்துள்ளது.**

அசர்பைஜான் நாட்டிலேயே இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

உலகில் பல நாடுகளும் இரண்டு விதமான தடுப்பூசிகளை ஏற்றுவதற்குப் பரிசீலித்து வருகின்றன. இவ்வாறு இரண்டு தடுப்பூசிகளை மாறிப் போடுவதால் உடலாரோக்கியத்துக்குக் கெடுதல் ஏற்படுமா? நோயெதிர்ப்புச் சக்தியில் நிலை என்னவாகும்? என்பது தொடர்பில் பல்வேறு கேள்விகள், சந்தேகங்கள் இருந்தன. இந்த நிலையிலேயே இருவேறு தடுப்பூசிகளை மாறிச் செலுத்துவதால் நோயெதிர்ப்புச் சக்தி நான்கு மடங்கு அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## மீன்பிடித்தலில் புடின்!

மொஸ்கோ, செப். 29

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மீன்பிடித்தலில் ஈடுபட்டுள்ள ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

புடினுக்கு நெருக்கமான வட்டத்தில் இருந்த நபரொருவருக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து புடின் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டார். தற்போது தனிமைப்படுத்தல்காலம் முடிவடைந்து அவர் பணிக்குத்திரும்பியுள்ளார். தனிமைப்படுத்தல் காலத்தில் இருந்த அழுத்தத்தைப் போக்குவதற்காக அவர் மீன்பிடித்தலிலும் ஈடுபட்டுள்ளார். அது தொடர்பான ஒளிப்படங்களே வெளியிடப்பட்டுள்ளன. (ம)

### ஷரிஆ சட்டத்தின் ஆட்சி

## தலிபானின் செயலுக்கு அமெரிக்கா கண்டனம்!

வொஷிங்டன், செப். 29

ஷரிஆ சட்டத்தின்படி தண்டனைகள் வழங்கப்படும் என்ற தலிபான்களின் அறிவிப்புக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது.



இதுதொடர்பில் அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நெட் ப்ரைஸ் தெரிவிக்கையில், தலிபான்கள் ஷரிஆ சட்டத்தின் கீழ் மேற்கொண்டுள்ளோம் எனக் கூறி நிறைவேற்றும் தண்டனைகள் தெளிவாக மனித உரிமைகளை மீறுவதாக உள்ளன. தலிபான்களின் தண்டனை குறித்த அறிக்கை மட்டுமல்லாமல் அவர்களின் செயற்பாடுகளையும் நாங்கள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். ஆப்கானில் உள்ள பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள், குழந்தைகளின் நலன் காக்க நாங்கள் துணை நிற்போம் என்றார்.

முன்னதாக, தலிபான் அமைப்பை நிறுவியவர்களுள் ஒருவர் முல்லா நூருதீன் துராபி அண்மையில் அளித்த பேட்டியில், 'தலிபான்களின் முந்தைய ஆட்சியின் போது தவறு செய்பவர்களுக்கு மைதானத்தில் தண்டனை நிறை வேற்றப்பட்டது.

அதுவும் குற்றத்துக்கு ஏற்ப கை, கால்களை துண்டிக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன. நாங்கள் மைதானத்தில் தண்டனை அளிப்பதை அனைவரும் கேள்வி கேட்கின்றனர். நாங்கள் யாருடைய சட்டங்களையும், தண்டனைகளையும் கேள்வி கேட்டதில்லையே. எங்கள் சட்டம் எப்படியிருக்க வேண்டும் என்று எங்களுக்கு யாரும் சொல்லித்தரத் தேவையில்லை. நாங்கள் இஸ்லாத்தைப் பின்பற்றுகிறோம்.

குரானின் அடிப்படையில் நாங்கள் எங்களின் சட்ட திட்டங்களை வகுக்கிறோம் - என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் காட்டுப்பகுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தொடர்பான ஒளிப்படங்கள் ரொய்டர்ஸால் வெளியிடப்பட்டன. தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.சி.சியைப் புறக்கணித்தவர்கள் மின் நிலையத்தை விற்றுள்ளனர்!

## ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



**கொழும்பு, செப். 29**

**எம்.சி.சி ஒப்பந்தத்தினூடாக நாட்டுக்கு நிவாரணமாக கிடைக்கவிருந்த அமெரிக்க டொலரை வேண்டாம் என கூறியவர்கள், கெரவலப்பிடிய மின் உற்பத்தி நிலையத்தை விற்பனை செய்து அதிலிருந்து நேரடியாக அமெரிக்க டொலரைப் பெற்றுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எம்.சி.சி. ஒப்பந்தத்தை நிராகரித்தவர்கள் மின்னுற்பத்தி நிலையத்தை விற்பனை செய்துள்ளனர். நிவாரணத் தொகையாக டொலர் கிடைத்திருந்தால் அதில் தரகுப் பணம் கிடைக்காது என்பதால் அதனை நிராகரித்து நாட்டின் தேசிய சொத்துக்களை விற்பனை செய்துவிட்டு தரகுப் பணத்தைப் பெற்றுள்ளனர். 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற பிணை முறிகள் கொடுக்கல் வாங்கலின்போது 10 பில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால் மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் பதவி வகித்த காலத்தில் இதுபோல நூறு மடங்கு நட்டம் ஏற்பட்டது - என்றார். (ம)

# டெல்டா வைரஸின் உபபிரிவுக்கு AY28



கொழும்பு,செப்.29

இலங்கையில் பரவியுள்ள கொரோனா வைரஸின் டெல்டா திரிபு உபமாறுபாட்டு வைரஸ்க்கு AY28 என்று அதிகாரப்பூர்வ பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவின் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவிக்கையில்,

டெல்டா திரிபின் இந்த மாறுபாடு முதலில் சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் செல் உயிரியல் பிரிவால் அடையாளம் காணப்பட்டது.

இந்த உப வகையின் 382 மாதிரிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 228 இலங்கையில் காணப்படுகின்றன. என்றார். (ம-4)



# கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி,செப்.29

சட்டவிரோத கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தருமபுரம் பகுதியில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 20 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

குறித்த பகுதியில் சட்டவிரோத கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டதில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)



# கிராமத்துக்கு ரூ.3 மில்லியன்

## கிராம அலுவலர்களுக்கு தெளிவூட்டல்

முல்லைத்தீவு.செப்.29

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு கிராமத்துக்கு மூன்று மில்லியன் ரூபா நிதியிலான திட்டம் தொடர்பில் தெளிவூட்டும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அதற்கமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராம அலுவலர்களுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான காதர் மஸ்தான் சந்தித்துக் கலந்துரையாடினார்.

துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, வெலிஓயா பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளர் ஊடாக கிராம அலுவலர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஒவ்வொரு கிராமங்களிலும் மக்களின் தேவைப்பாடுகளை அடையாளப்படுத்தி, முதற்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் என்ற முன்மொழிவின் ஊடாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான அறிக்கை கிராமங்களில் இருந்து தயாரிக்கப்பட வேண்டும் என்று கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. (ம-4.19)

### லொஹான் ரத்வத்த விவகாரம்

# விசாரணை அறிக்கையின்பின் நடவடிக்கை என்கிறார் சாகர!



கொழும்பு, செப். 29

சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பெரமுன தாமதிக்கின்றது என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ள பெரமுனவின் பொதுச் செயலர் சாகர காரியவசம், விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அநுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டி, முழந்தாளிடச் செய்து மிரட்டிய முன்னாள் துறைசார் இராஜாங்க அமைச்சர் ரத்வத்தவுக்கு எதிராக இதுவரை எந்த ஒழுக்காற்று நடவடிக்கையும் பெரமுனவால் மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் விசாரிப்பதற்கு நீதியமைச்சர் அலி சப்ரி, ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தனவின் தலைமையில், ஐவரடங்கிய விசாரணைக் குழுவை நியமித்தார். லொஹான் ரத்வத்த, வெலிக்கடை சிறைக்கும் அநுராதபுரம் சிறைக்கும் சென்றிருந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம)

# மீண்டும் சந்தர்ப்பம்

சாவகச்சேரி.செப்.29

தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை கொரோனாத் தடுப்பூசிசெலுத்திக்கொள்ளாதவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

பிரதேசத்தில் வதியும் 20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு சாவகச்சேரி, வரணி, கொடிகாமம், நாவற்குழி, மட்டுவில் போன்ற இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படுகின்றது.

அத்துடன் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாதவர்கள் சுகாதாரப் பணியகத்தில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

# கிடைக்கும் தடுப்பூசியே சிறந்தது இளையோர் எண்ணம் பெருமைக்குரியது

## மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவிப்பு



மன்னார்.செப்.29

இளையோர், தடுப்பூசிகளை தெரிவு செய்யாது முதலில் கிடைக்கும் தடுப்பூசியை சிறந்ததாக கருதி ஆர்வமாக தடுப்பூசியை பெற்று வருகின்றமை பெருமைக்குரியது என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமைகள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 72 ஆயிரத்து 927 பேருக்கு முதலாவது தடுப்பூசியும், 59 ஆயிரத்து 605 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் ஏற்றப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்குக் குறைந்த 19 ஆயிரத்து 842 பேர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

மன்னாரில் இளையோர் தடுப்பூசிகளை தெரிவு செய்யாது முதலில் கிடைக்கும் தடுப்பூசியே சிறந்தது என திடமாக இருந்து ஆர்வமாக தடுப்பூசிகளை பெற்று வருகின்றமை ஏனையோருக்கு முன்மாதிரியான செயற்பாடாகும் - என்றார். (ஐ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1964



மறைவு 28 . 09 . 2021

### கணேசரத்தினம் மோகனசுந்தரம் (மோகன்)

(தவில் வித்துவான்)

அளவெட்டியை பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட கணேசரத்தினம் மோகனசுந்தரம் (மோகன்-தவில் வித்துவான்) நேற்று (28.09.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசரத்தினம் (சின்னக்கணேஸ் - தவில் வித்துவான்) இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணகுமாரியின் அன்புக் கணவரும், சுகந்தன், வசந்தன், ரஜீகன், ரதீபன், பிரதீபன், பிரதாப் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 9.30 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9877 325

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 01 . 1940



மறைவு 27 . 09 . 2021

### அமரர் கணபதிப்பிள்ளை இந்திரராசா

(இந்திரன் மாஸ்டர்)

(முன்னாள் பிரதி அதிபர், சுழிபுரம் யா/ விக்ரோறியாக் கல்லூரி)

கரணவாய் தெற்கு சோழங்கனையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை பூர்விக வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கணபதிப்பிள்ளை இந்திரராசா நேற்று முன் தினம் (27.09.2021) திங்கட்கிழமை பறளாய் முருகன் பாதக் கமலங்கள் அடைந்து விட்டார்.


அன்னார் சுழிபுரம் மத்தி காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அருமை மகனும், பன்னாலை காலஞ்சென்றவர்களான மாணிக்கம் தெய்வானைப்பிள்ளைதம்பதிகளின் அன்பு மருமகனும், சத்தியஞானலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், தங்கராஜா, அம்பிகாதேவி மற்றும் சிவராசா (வாகை), உருக்குமணிதேவி (பாலா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சத்தியமூர்த்தி மற்றும் தனலட்சுமி சாந்தகுமாரி, அசோகன், திருநாவுக்கரசு, சத்தியபாலதேவி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கதிர்காமநாதன், ஜெகநாதன், கலாறஞ்சினி, சுலோஜினி, சிறி கரன், விஜயநாதன், சுவேந்திரநாதன், தயாளினி, தர்சினி ஆகியோரின் சித்தப்பாவும், சண்முகப்பிரியாவின் பெரியப்பாவும், சுகந்தி, காலஞ்சென்ற நவீன், சர்மிலன், நிசாந்தன் அவர்களின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினம் (27.09.2021) திங்கட்கிழமை அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சுழிபுரம் மத்தி.
க.சிவராசா (வாகை) : 077 663 1019
த. சிறிகரன் : 077 623 9122

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 06.10.1981 மறைவு : 10.10.2020

அமரர்

### லிங்கோற்பவநாதர் ரவிசங்கர்

ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் நினைவு
என்றும் எம் மனதைவிட்டு அகலவில்லை
உங்களது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
06.10.2021 அன்று 40 ஆவது பிறந்த தினத்தையும்
நினைவு கூருகின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்.

236, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 10 . 01 . 1939



விண்ணில் 27 . 09 . 2021

### திருமதி யூலியானா பரமேஸ்வரி அபிஷேகநாதன்

பலாலி புனித செபஸ்தியார் கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கு, அரசடி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யூலியானா பரமேஸ்வரி அபிஷேகநாதன் அவர்கள் கடந்த (27.09.2021) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ் ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அந்தோனி லேனா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அந்தோனி அபிஷேகநாதனின் அன்பு மனைவியும், றெஜினா, மாட்டின் ஜெயராஜா (யூட்சன் பான்சி விற்பனையாளர்), அலெக்சாந்திரா, அன்ரன் பீலிக்ஸ் (கலா மல்ரி சென்ரர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இம்மானுவேல் ஜெயதாசன் (புடைவை வியாபாரம்), நிர்மலா, யேசுரட்ன ம் செபரட்ணம் (வெல்டிங்), கத்தரின் மரியகொறற்றி (ஆசிரியை, காரைநகர், தோ புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியா சாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வினிபிறட் ஸ்ரீபன் (சம்பத் வங்கி, திருநெல்வேலி), டினோஷியன் அமல்தேவ் (பான் ஏசியா வங்கி, நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மரிய செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), மரியராஜ புஸ்பம், காலஞ்சென்ற திருஞானசீலன் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர்), மேரிறோஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரிய ரட்ணம், திருச்செல்வம் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி), லீலிமலர் மற்றும் இம்மானுவேல் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வான மின்தகன நிகழ்வு 29.09.2021 காலை 6.00 மணியளவில் கோம்பயன் மயானத்தில் நடைபெற்று, அஸ்தி சென் பீற்றர்ஸ் தேவாலயத்திற்கு கொண்டு சென்று பின்னர் நவாலி சென் பீற்றர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஊடகங்களின் ஆசிரியர்கள் சி.ஐ.டி.விசாரணைக்கு அழைப்பு

இரண்டு சிங்களப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் உள்ளிட்ட ஊழியர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

சமீபத்தில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் பதவியில் இருந்து துஷான் குணவர்தன விலகியிருந்த நிலையில், சதொச நிறுவனத்தில் பல்வேறு மோசடி சம்பவங்கள் இடம்பெற்றன என்று அவர் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தார்.

இந்தநிலையில், இந்த குற்றச்சாட்டுக்களை எதிர்த்து வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவால் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பில் தற்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், கடந்த நாள்களில் சதொச நிறுவனத்தில் ஏற்பட்ட மோசடி சம்பவங்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' மற்றும் 'திவயின' பத்திரிகைகள் பல்வேறு செய்திகளை பதிவிட்டிருந்தன.

இந்தச் செய்திகளின் உண்மைத்தன்மை தொடர்பில் ஆராய்வதற்காக 'லங்காதீப' பத்திரிகையின் ஆசிரியர், குறித்த பத்திரிகை நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் 'திவயின' பத்திரிகையின் ஆசிரியர் உட்பட்டோருக்கு குற்றப் புலனாய்வு பிரிவு விசாரணைக்காக அழைப்பு விடுத்துள்ளது.

இதேவேளை, குறித்த ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார். (து-22)

---

*முன்னாள்...*

டைய புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

புலிகள் அமைப்பில் இருந்தபோது இவர் இம்ரான் பாண்டியன் படையணியில் செயற்பட்டுள்ளார் என பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்தனர்.

நாராஹேன்பிட்டி பகுதியிலுள்ள தனியார் மருத்துவமனையின் மலசலக்கூடத்திலிருந்து கடந்த 14 ஆம் திகதி கைக்குண்டொன்று மீட்கப்பட்டது.

இதனையடுத்து திருகோணமலை உப்புவெளி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

பொலிஸாருக்கு தகவல் வழங்கி பரிசு பெறும் நோக்கிலேயே தான் குண்டை வைத்தேன் என்றும், கொழும்பு விஜயராம பகுதியிலுள்ள அமைச்சரொருவரின் வீட்டில் புனரமைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவேளை குறித்த குண்டு கிடைத்தாகவும் குறித்த இளைஞர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

எனினும், அரச புலனாய்வுப் பிரிவு மற்றும் கொழும்பு குற்றப்பிரிவு இணைந்து தேடுதல் வேட்டையை தீவிரப்படுத்தின. இதன்பிரகாரம் முதலாவது சந்தேக நபருக்கு கைக்குண்டை வழங்கிய நபர் இனங்காணப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், நேற்று உப்புவெளி பகுதிக்குச் சென்ற புலனாய்வுப் பிரிவு மற்றும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் 40 வயதுடைய முன்னாள் போராளியை கைது செய்துள்ளனர்.

அதேவேளை, கைக்குண்டை வழங்கிய குறித்த நபர் அதை வெடிக்க வைப்பது தொடர்பில் 6 நாள்கள் பயிற்சி வழங்கினார் என்றும் மருத்துவமனையில் குண்டை வைத்த சந்தேக நபர் விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

பயிற்சி வழங்கப்பட்ட இடத்தையும் பாதுகாப்பு தரப்பினர் நேற்று கண்காணித்தனர்.

முன்னாள் போராளி குறித்த கைக்குண்டை வழங்கினாரா அல்லது அமைச்சரின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டதா என்பது உட்பட இது தொடர்பில் பலகோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (து-44)

நேற்று நடைபெற்ற தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருக்கவில்லை. (து-26)

*அத்தியாவசியப்...*

செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக வடக்கில் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்களை இனித் தட்டுப்பாடின்றிப் பெறமுடியும்.

இவ்வாறு, வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களை செயற்றிறனோடு இயங்க வைப்பது தொடர்பான கூட்டம், மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் தலைமையில் நிகழ் நிலையில் நடைபெற்றது.

அதில், வடக்கு மாகாணக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆணையாளர்கள், பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர். அதன்போது, மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக்கொடுக்க கூட்டுறவுச் சங்கங்களிடம் பொருளாதார நிலை சாதகமாக இல்லை. எனவே கடனடிப்படையில் னபொருள்களைக் கொள்வனவு செய்தால் தட்டுப்பாடின்றி அவற்றை விநியோகிக்கமுடியும் என்ற கருத்தை பலரும் முன்வைத்தனர். அதனையடுத்தே மேற்கண்டவாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சுடன் தேவையான பொருள்களைக் கடனடிப்படையில் கொள்வனவு செய்து மக்களுக்கு விநியோகிக்க முடியும். இதன்மூலமாக வடக்கில் அத்தியாவசியப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இனித் தட்டுப்பாடின்றிப் பெறமுடியும் என்பதோடு, மீண்டும் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக அதிகளவானோர் பயன்பெறவும் முடியும் - என்று தெரிவித்தார். (து)

*மாநகர சபை...*

ராக கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.


யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு சபையின் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது சபை அமர்வின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதன்பின்னர், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் வைத்து கடந்த 23 ஆம் திகதி யாழ். மாநகர சபை உறுப்பினர் ரஜீவ்காந் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை மற்றும் ஏற்றப்பட்ட தீபத்தை பொலிஸார் காலால் தட்டிவிட்டமை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 26 . 03 . 1949 | | 27 . 09 . 2021 |



### திரு. மாரிமுத்து மகேந்திரன்

வடக்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. மாரிமுத்து மகேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (27.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து, இலட்சுமி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும், தர்சியா (பிரான்ஸ்), பிரதீபன் (வலி. வடக்கு பிரதேச சபை), தயாளினி, தர்மினி (வலி தெற்கு, பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மோகன்ராஜ் (பிரான்ஸ்), பிறேமதாசன், பிரபாகினி, நிகால்டான்சன் ஆகியோரின் அன்பு மிகு மாமனாரும், சஜினா, கிருத்திகா, பவித்திரன் (பிரான்ஸ்), அர்ச்சனா, ஆர்த்திகன், யர்சணன், வினுகன், கவினாஜ் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், பர்வதம் (கொழும்பு), முருகையா, புவனேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்றைய தினம் (27.09.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 17 . 01 . 1939 | | 28 . 09 . 2021 |



### இளையதம்பி இரத்தினசிங்கம்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இரத்தினசிங்கம் நேற்று (28.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் யோகமலர் அவர்களின் அன்புக் கணவரும், தயாநிதி (புஸ்பி - லண்டன்), நந்தினி (அப்பி-லண்டன்), சதீஸ்குமார் (குமார்-லண்டன்), அமரர் காமினி (பாப்பா-லண்டன்), துஸ்யந்தினி (பிரபா-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், குணசேகரம் (லண்டன்), துரைச்சாமி (லண்டன்), சிந்துஜா (லண்டன்), சசிதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், மகேஸ்வரி, நாகரத்தினம் ஆகியோரின் சகோதரரும், ரம்யா, கௌதமன், சபேசன், டினேஸ், பிரகாஸ், சபானா, சஜித், சயந் ஆகியோரின் பேரனும், அமரர் சுப்பிரமணியம் (CTB), பேபி சரோஜா, சந்திரசேகரன், சுசிலாதேவி, பரஞ்சோதி, காசிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2021) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, நீர்வேலி சீயாக்காடு இந்து மயரனத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**சதீஸ்குமார் - லண்டன்**
**00447711984055**


*2 வாள்களுடன்...*

அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் மேலதிக விசாரணைகளுக்காக அச்சுவேலி பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (து-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய துணைத்தூதர் வடக்கு ஆளுநர் சந்திப்பு



இந்தியத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சாள்ஸை நேற்றுச் சந்தித்தார்.

இந்திய திட்டங்கள் மற்றும் வடக்கு மாகாணத்தில் இந்திய வளர்ச்சி ஒத்துழைப்பு வாய்ப்புகள் குறிப்பாக போக்குவரத்து, கமநலம், சுகாதாரம் மற்றும் வீட்டுத் துறை தொடர்பான விஷயங்கள் குறித்து கலந்துரையாடினார் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரக செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# வுனியாவில் ஒருவர் சாவு; 47 பேருக்குத் தொற்று

வவுனியா, செப். 29

வவுனியாவில் மேலும் 47 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் கொரோனாத்தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்கள், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாறாக பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனை மேற்கொண்டவர்களிடம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கே கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை தொற்று உறுதியாகி வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

இந்தநிலையில் தொற்றாளர்களையும், அவர்களுடன் தொடர்புடையவர்களையும் சுய தனிமைப் படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-110)

# ஒரு லட்சம் கிலோ சீனி வடக்குக்கு இன்று வருகிறது

யாழ்ப்பாணம், செப். 29

வடக்கு மாகாணத்துக்கு மேலும் ஒரு லட்சம் கிலோ கிராம் சீனி இன்று எடுத்துவரப்படவுள்ளது.

கொழும்பிலுள்ள 'கோப்பெட்' நிறுவனத்திலிருந்து சீனி எடுத்துவரப்படவுள்ளது என்று வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மு.நந்தகோபாலன் தெரிவித்தார்.

எடுத்துவரப்படும் சீனி வடக்கிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும். அவற்றை சங்கங்கள் பொதுமக்களுக்கு நியாயவிலையில் வழங்கும். வடக்கில் சீனிப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும்நோக்கில் இவ்வாறு சீனி எடுத்துவரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## பெயர் மாற்றம்

கரணவாய் மேற்கு, கரவெட்டியில் வசிக்கும் **குகன் - மடுச்செல்வம்** ஆகிய நான் இன்று முதல் **குகன் மடுச்செல்வி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் குகன் மடுச்செல்வி என்றே ஒப்பமிடுவேன் என இலங்கை சோசலிசக் குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகிறேன்.

**குகன் மடுச்செல்வி**

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை – காங்கேசன்துறை மல்லாகம் கடைத்தொகுதியிலுள்ள கடை இல.05 வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2021

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடையினை பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :-30.09.2021 தொடக்கம் 28.10.2021 பிற்பகல் 3.00 மணி வரை**

**கேள்விப் பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 29.10.2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி வரை**

**கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 29.10.2021 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணி**

கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை **தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை** எனும் முகவரிக்கு **29.10.2021**.ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **வலிகாமம் வடக்கு பிரதேசசபை – மல்லாகம் கடைத்தொகுதியிலுள்ள கடை இல.05 இனை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-** 2021 என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

01. கேள்விப் பத்திரம் கேள்வி கோரும் வியாபார நிலையத்திற்கு கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
03. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.
06. இவ் வியாபார நிலையத்திற்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
07. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கை துணை, வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவர்.
08. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
09. சித்திபெறாத கேள்விதாரரின் கேள்விவைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிப்புச் செய்யப்படும்.
10. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
11. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
12. சித்திபெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது தடைசெய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
13. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
14. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை / தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது 0212241130 என்னும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| விபரம் | பரப்பளவு (சதுர அடி) | ஆகக் குறைந்த கேள்வித்தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப்பத்திர கட்டணம் (மீளளிக்க முடியாதது) | கேள்விவைப்பு (மீளளிக்கக் கூடியது) |
|---|---|---|---|---|
| மல்லாகம் கடைத்தொகுதி **கடை இல. 05** | 312.5 சதுர அடி | 1,200,000.00 | 2000.00 | 120,000.00 |

திரு. சோமசுந்தரம் சுகிர்தன்
தலைவர்
உள்ளூர் அதிகாரப் பெறுகைச்சபை,
வலிகாமம் வடக்குபிரதேச சபை,
காங்கேசன்துறை.

29.09.2021

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் **திரு.கேதீஸ்வரன்** அவர்களின் அன்பு மாமியார்

**பத்திநாதர் பூர்வீகராணி**

அவர்களின் கடந்த (05.09.2021) ஞாயிற்றுக் கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினரும் பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தருமான **திரு. த.அருந்தமிழ்ச்செல்வன்** அவர்களின் பாசமிகு தந்தையார்

**மரியாம்பிள்ளை சூசைதாசன் தம்பிநாயகம்**

உதிப்பு : 18.10.1940 உதிர்வு : 25.08.2021

அவர்கள் 25.08.2021 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம் - சாவகச்சேரி.**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி




எம்மையே நினைத்து மெக்காகவே வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அப்பா!

**அமரர் இளையவி சின்னராசா**
**(ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)**

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்து காட்டிய அப்பாவே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில் சுடர் விட்டுக் கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து மூன்றாண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது

இன்று (29.09.2021) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**39, அரசடி வீதி,**
**5ஆம் ஒழுங்கை, நல்லூர்.**

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

## மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம் : 15**
**ஆதன இலக்கம் : 115**
**யாழ் காரைநகர் வீதி**

வட்டாரம் 15 யாழ் காரைநகர் வீதி. ஆதன இலக்கம் 115 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவில்பற்று சண்டிலிப்பாய் இறை **'கம்பிராத்தனை'** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 07 கொண்ட இவ்வாதனமானது 7ஆம் கட்டை சண்டிலிப்பாயைச் சேர்ந்த இராசையா மகள் தவசிரோன்மணிதேவி ஆகிய இவர்களால் 7ம் கட்டை சங்கானையைச் சேர்ந்த கந்தையா ஞானகணேசன் பெண் செல்வமலர் இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திருமதி. ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் நிறைவேறிய 4359 ஆம் இலக்கம் 2021.05.18 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு திரு.எம்.கே. சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேறிய 9184 ம் இலக்க 1972.02.13 திகதிய அறுதி உறுதியின் மூலம் இராசையா இராசேந்திரத்துக்கு ½ பங்கும் பிரசித்த நொத்தாரிசு திரு.எம்.கே. சுப்பிரமணியம் முகதாவில் நிறைவேறிய 8453 ம் இலக்க 1970.06.03 திகதிய அறுதி உறுதியின் மூலம் ¼ பங்கும் வந்தடைந்ததாகும். இவ்வுறுதியின் தாயுறுதி 19139 ம் இலக்க 1943.02.06 ம் திகதி பிரசித்த நொத்தாரிசு திரு.கு.ஆறுமுகம் அவர்களால் எழுதப்பட்ட நன்கொடை உறுதி மூலம் இராசையா பொன்னம்மாவின் முழு ஆதனத்தில் சொரியலாய் ¼ பங்கு நன்கொடையும் தாயார் காலம் செல்ல அவரின் 03 பிள்ளைகளான இராசையா நடராசா. இராசையா இராசேந்திரம். இராசையா மகள் தவசிரோன்மணிதேவி ஆகிய மாதா வழி முதுச ஆதனமாகும். நில அளவையாளர் திரு.S. பத்மகாந்தன் அவர்களால் வரையப்பட்ட 247ம் இலக்க 2021.04.11 ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது **'கம்பிராத்தனை'** நிலப்பரப்பு 07 குளி 00.00 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும். உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத்திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதமானது கந்தையா ஞானகணேசன் பெண் செல்வமலர் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்.**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி
ச. ஜக்ஷனா அவர்களின் அன்பு மாமனார்


### கதிரன் முருகேசு

அவர்கள் கடந்த (14.09.2021) செவ்வாய் கிழமை காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்,**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

## என்றும் நீங்கா நினைவுடன் 5ஆம் ஆண்டு

தோற்றம்
30
07
1932



மறைவு
29
09
2016

### அந்தோனிப்பிள்ளை செபமாலை

எங்கள் வாழ்வில் ஒளி விளக்காய்
எங்களுக்கு வழிகாட்டிய எங்கள் அப்பாவே
ஆண்டுகள் 5 சென்றாலும் தாங்காத
வலிகளோடும் தூங்காத விழிகளுடன்
வற்றாத கண்ணீருடனும் பிரிந்து தவிக்கின்றோம்
அப்பா ஆயிரம் ஆயிரம் உறவுகள் அருகில்
இருந்தாலும் எங்கள் அப்பாவிற்கு நிகராகுமோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

மேரி லெற்றீரிசியா
(மகள்)
076 192 9724

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட வரும் திரு. செல்லையா கெங்காதரன் (முன்னாள் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளரும், தற்போதைய மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளரும்) அவர்களின் அன்பு மனைவியும், சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த எங்கள் அன்பு அம்மாவின் மறைவின் 31ஆம் நாள் நினைவஞ்சலி**

ஐவராய் எம்மை பெற்றெடுத்து அனைத்து செல்வங்களையும் எமக்காய் தேடித் தந்து இறுதிவரை மகிழ்வித்தார். எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் எங்கள் அம்மாவின் நினைவுகள் எம்மோடு கூடவே குடியிருக்கும்.

*கற்றுத் தந்தவள் நீங்கள்*
*பற்று வைத்தவரும் நீங்கள்*
*இனிய சுற்றுத் தருணங்களை*
*எமதாக்கியவளும் - நீங்கள்*
*இன்று வீடா இனிய வாழ்வை எமக்களித்து*
*அதில் நீங்கள் அற்றுப் போனதேன்.... அம்மா!*
*நீங்கள் உதிர்ந்த எம் கோயிலிலே*
*குடியிருந்த நாம் தவிக்கின்றோம். ....*
*குதூகலிக்க நீங்கள் இன்றி...*
*நெஞ்சில் வலியுடனும்*
*நீங்காத நினைவுகளோடும்.*

எமது அன்னையின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாக ஆறுதல் கூறியவர்கள் மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.09.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் . வீட்டுக்கிருத்தியம் எதிர்வரும் (02.10.2021) சனிக்கிழமை 12.00 மணியளவில் எமது இல்லத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றவாறு நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

### அமரர் கெங்காதரன் செல்வராதாதேவி

தோற்றம் : 21.08.1960
மறைவு : 31.08.2021

இல. 26/18, பழைய
ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்
021 226 4846
077 911 7156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி.எஸ்.பி....

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவினரிடம் நேரில் வலியுறுத்தினர் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

இந்தத் தரநிலைகளை இலங்கை பூர்த்தி செய்யாமல், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வழங்கப்பட்டால், அது சிறுபான்மையினரை ஒடுக்கும் அரசின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தாது எனவும் இதன்போது கூட்டமைப்பினர் சுட்டிக்காட்டினர். இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சோ.சேனாதிராசா (தமிழரசுக் கட்சி), நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிக்கையில்,

"வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவினருக்கு இதன்போது விளக்கமளித்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தக சலுகை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

**நில அபகரிப்பு**

தமிழ் மக்களின் நிலங்களை அபகரிப்பதற்கும், குடிப்பரம்பலை மாற்றியமைக்கவும் இலங்கை அரசுகள் அனைத்தும் செயற்பட்டாலும், தற்போதைய அரசு அதில் மிக வேகமாகச் செயற்பட்டு வருகிறது. தொல்லியல் திணைக்களத்தின் மூலம் தமிழ் மக்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலையில் தொல்லியல் திணைக்களத்தால் காணிகளை இழந்த மக்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். மட்டக்களப்பு மேய்ச்சல் தரவை தமிழ் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளது. அதை நம்பி வாழ்ந்த பண்ணையாளர்கள் கைவிடப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமென நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம். இப்போது ஐரோப்பிய ஒன்றியமும் கேட்கின்றது. எனினும், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை சாட்டாக வைத்து அதை நீடிக்க அரசு முயல்கின்றது. அநுராதபுரம் சிறைச்சாலையில் நடந்த சம்பவம், நடப்பு சூழலை தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

**தொடர்கிறது பி.ரி.ஏ. கைது**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றார்கள். பல தசாப்தங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு நிர்வாக அதிகாரிகளாக சிங்களவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அனைத்து வழிகளிலும் சிங்கள மயமாக்கல் தீவிரமாக நடந்து வருகிறது. தமிழ் மக்களின் அரசியல் உரிமை தொடர்பான எந்தவொரு பேச்சுக்கும் அரசு தயாராக இல்லை.

**தகுதி இன்னுமில்லை**

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதெனில், அந்தத் தரநிலை முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இலங்கையின் தரநிலை மேம்படாத நிலையில், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்கக்கூடாதென ஐரோப்பிய நாடாளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதை நீங்கள் மிகத் தீவிரமாகக் கணக்கில் எடுக்க வேண்டும்.

இந்தத் தரநிலைகளை இலங்கை பூர்த்தி செய்யாமல், ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வழங்கப்பட்டால், அது சிறுபான்மையினரை ஒடுக்கும் அரசின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்தாது என எம்மால நீண்ட விளக்கமளிக்கப்பட்டது.

**நிலையான தீர்வு வேண்டும்**

இந்த விவகாரங்களில் குறுகிய கால தீர்வு எதையாவது யோசிக்கலாமா என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் கேட்டபோதும், அதை நாம் ஏற்கவில்லை. நீடித்த, நிலையான தீர்வே தமிழ்த் தரப்பால் ஆராயப்படும்; அதுவே தேவையானது என்று தெரிவித்தோம்.

இந்த விவகாரங்களில் தமக்கும் வரையறைகள் உள்ளன. நாளை (இன்று) அரசுடன் நடக்கும் மீளாய்வுக் கூட்டத்தில் இந்த விவகாரங்களை ஆராய்வதாக ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவினர் தெரிவித்தனர்" என்றார். (த-22)

## தொற்று...

திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 786 ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 55 பேரில் 26 பெண்களும் 29 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 10 ஆண்கள், 6 பெண்கள் என 16 பேர் 30 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 39 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 19 ஆண்களும், 20 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, இலங்கையில் நேற்றும் ஆயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நேற்று 932 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 15 ஆயிரத்து 524 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 743 பேர் நேற்று குணமடைந்துள்ளனர். இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 86 ஆயிரத்து 87 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## நாவற்குழியில்...

ஜன்னல் மற்றும் பொருள்களை அடித்து நாசமாக்கியது. வீட்டு வேலியையும் சாய்த்துவிட்டுச் சென்றது.

இந்தச் சம்பவம், சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி ஜே/294 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஐயனார் கோவிலடியில் நேற்றுமுன்தினம் இரவு அரங்கேற்றப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தந்தை மற்றும் இரு மகன்கள் கையிலும் தலையிலும் காயமடைந்தனர். அவர்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்க அம்புலன்ஸ்ஸை வரவழைத்தபோது குறித்த குழுவினர் திருப்பி அனுப்பியுள்ளனர். அங்கு நின்றால் அம்புலன்ஸ் வாகனத்தை அடித்து நொருக்குவோம் என்றும் எச்சரித்து திருப்பி அனுப்பியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது. அதனையடுத்தே, பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதன்பின்னர் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்தே காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றனர். அந்தளவுக்கு குறித்த குழுவினர் அடாவடியில் ஈடுபட்டனர் என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்தனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர், திருட்டில் ஈடுபட்ட நபர்கள் தொடர்பில் பொலிஸாரிடமும் கிராம அலுவலரிடம் தகவல் வழங்கியிருந்தனர். அதற்குப் பழிவாங்கும் நோக்கில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று குடும்பத்தினர் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏனையோர் இதுவரை கைது செய்யப்படவில்லை. விசாரணை தொடர்கின்றது என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-159)

## நாட்டரிசி...

குறித்த அறிவிப்பை ஆலை உரிமையாளர் சங்கம் வழங்கியுள்ளது. இன்று நடந்த ஊடக சந்திப்பில் உரையாற்றிய அந்த சங்கத்தின் தலைவர் டட்லி சிறிசேன அரிசி விலையை வெளியிட்டார்.

அதன்படி, ஒரு கிலோகிராம் நாட்டரிசி 115 ரூபா, ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 140 ரூபா, ஒரு கிலோகிராம் கீரிச் சம்பா அரிசி 165 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## மின்தகனத்துக்கு...

ணத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்த அமர்வு, மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின் தகன கட்டணத்தில் மாற்றம் செய்வதற்கு சபை அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி 12 வயதுக்கு குறைந்த கொரோனாத் தொற்றாளர்களின் சடலங்களுக்கு 4 ஆயிரம் ரூபாவும், ஏனைய கொரோனாத் தொற்றாளர்களின் சடலங்களுக்கு 8 ஆயிரம் ரூபாவும் தகனம் செய்வதற்கு அறவிடப்படவுள்ளதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கொரோனாத் தொற்று அல்லாத சடலங்களுக்கு 15 ஆயிரம் ரூபா அறவிடப்படவுள்ளதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (த-26)

## சிகரெட்...

வரியை அதிகரிக்க அரசு ஏன் பின் வாங்குகின்றது? என்று கேட்டு பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

அந்தக் கடிதத்தில்,

அரசு ஏழை மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களின் மீதான வரியை அதிகரித்து வருகின்றது. ஒரு சிகரெட்டின் விலையை 20 ரூபாவால் உயர்த்தியிருந்தால் சுமார் 100 பில்லியன் ரூபாவை இழக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

இன்று பெரும்பாலான சிறுவர்கள் முதல் பெரியோர் வரை இதனைப் பயன்படுத்துவதாலும் இதற்கு அடிமையாகி காணப்படுகின்றமையாலும் இது ஓர் பெரும் சமூக சீர்குலைவுக்கு வழிவகுத்துக்கொண்டிருக்கிறது.

எனவே இதனைத் தடுக்க வேண்டுமென்றால், அரசு சிகரெட் மீதான முறையான வரி முறைமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறான வரிமுறைமையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசு தனது வருமானத்தை அதிகரிக்கச்செய்வதோடு பாவனையிலும் சடுதியான வீழ்ச்சியை ஏற்படுத்த முடியும். இன்றைய காலப்பகுதியில் சிகரெட் பாவனையைக் குறைப்பதானது கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பெரும் உதவியாக அமையும் என்பதும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் நவம்பர் மாதம் முன்வைக்கப்படவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் சிகரெட் மீது முறையாக வரி அறவிடப்படும் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவீர்கள் என தீர்க்கமாக நம்புகின்றேன். - என்றுள்ளது. (த-213)

## 31 பவுண்...

என. வீட்டில் இருந்தவர்களும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் நடந்துள்ளது. மாமனார் மற்றும் மருமகன் ஆகியோரின் வீடுகளிலேயே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்தவர் வெளியே வந்து பார்த்தபோது, அவரைத் தாக்கி அச்சுறுத்தியவாறு கொள்ளையர்கள் வீட்டுக்குள் நுழைந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஒரு வீட்டில் 19 பவுண் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மற்றாரு வீட்டில் 7 பவுண் நகைகளும் மூன்றாவது வீட்டில் 95 ஆயிரம் ரூபா பணம், 5 பவுண் நகைகள் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

அதேவேளை, மருமகனின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 29 பவுண் நகைகள் மற்றும் 65 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அதேவேளை, மாமனாருக்கும், மருமகனுக்கும் ஒரு கால் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

6 பேர் கொண்ட கும்பலே இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான கொள்ளைச்சம்பவங்கள் கிராமத்தில் அச்சத்தினை ஏற்படுத்தியுள்ளன. (எ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லியை துவைத்தது கொல்கத்தா மும்பையின் 'பிளேஓவ்' கனவு சிக்கல்

**டுபாய், செப். 29**

**ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில் டெல்லியை 3 இலக்குகளால் வீழ்த்தியது கொல்கத்தா. இதையடுத்து மும்பை இந்தியன்ஸ் அணியின் பிளேஓவ் கனவு சிக்கலுக்கு உரியதாக மாறியுள்ளது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது டில்லி. அந்த அணியின் ஆரம்ப வீரர் பிருத்வி ஷா நீக்கப்பட்டு சிமித், தவானுடன் ஆரம்ப வீரராகக் களமிறங்கினார். வழக்கம்போல ஆரம்பத்தில் அதிரடிகாட்டினார் தவான். மறுமுனையில்



நிலைத்து நின்று தவானுக்கு வாய்ப்புக்களை வழங்கினார் சிமித். 24 ஓட்டங்களுடன் தவானின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஸ்ரேயஸ் வெறும் ஓர் ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார்.

சிமித்துடன் இணைந்து இலக்குச் சரிவைத் தடுத்தார் பன்ட். இணைப்பாட்டம் நிதானித்தாலும் ஓட்டங்களில் முன்னேற்றமில்லை. 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சிமித். இதற்காக அவர் 34 பந்துகளை எதிர்கொண்டார். பன்ட்டின் இன்னிங்ஸூம் 36 பந்துகளில் 39 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. ஆக, சிமித் மற்றும் பன்ட் இருவரும் இலக்குச் சரிவைக் காத்துநின்றார்களே தவிர ஓட்டக்குவிப்பை மேற்கொள்ளவில்லை. முடிவில் 9 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது டில்லி.

பந்துவீச்சில் பேர்குசன், நரைன், வெங்கடேஸ் மூவரும் தலா 2 இலக்கு களை கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர்கள் சொல்லிக்கொள்ளும் படியான அத்திபாரத்தைக் கொடுத்தனர். 14 ஓட்டங்களுடன் வெங்கடேஸூம், 9 ஓட்டங்களுடன் திரிபதி யும் ஆட்டமிழந்தனர். கில், ரணா இணைந்து



வெற்றியை நோக்கி அணியை அழைத்துச் சென்றனர். 30 ஓட்டங்களுடன் கில் ஆட்டமிழந்தார். அணித்தலைவர் மோர்கன் ஓட்டமெதையும் பெறாமல் வந்த வேகத்தில் பவிலியன் திரும்பினார். எனினும் ரணாவின் நிதானமும், நரைனின் இறுதிக்கட்ட அதிரடியும் கைகொடுக்க டெல்லியை 3 இலக்குகளால் வீழ்த்தியது கொல்கத்தா.

நரைன் 10 பந்துகளில் 21 ஓட்டங்களைப் பெற்றார். ரணா 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

ரி20 உலகக்கிண்ணத்தில்

# 25ஆயிரம் ரசிகர்களை அனுமதிக்கவேண்டும்

### பி.சி.சி.ஐ. கோரிக்கை



டுபாய், செப். 29

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள ரி20 உலகக்கிண்ணத் தொடரில் 25 ஆயிரம் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று பி.சி.சி.ஐ. ஐக்கிய அரபு இராச்சியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உண்மையில் இந்த ரி20 உலகக்கிண்ணத் தொடர் இந்தியாவில் நடைபெற வேண்டியது. ஆனால் கொரோனாத் தொற்று நிலைமைகள் காரணமாக தொடரை இந்தியாவில் நடத்த இயலாமல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தியக் கிரிக்கெட் சபை நடத்துகின்றது.

ஐ.பி.எல் தொடரும் ஐக்கிய அரபு இராச்சியத்திலேயே தற்போது நடைபெற்றுவருகின்றது. இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கோரிக்கையை ஏற்று ஐ.பி.எல். தொடரில் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே ரி20 உலகக்கிண்ணத் தொடரில் பார்வையாளர்களை அனுமதிப்பது தொடர்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

**பணிப்பெண் தேவை**
2 1/2 வயது. 9 மாதம் நிரம்பிய இரண்டு பிள்ளைகளை மட்டும் பராமரிப்பதற்கு 35 வயதிற்கு மேற்பட்ட தங்கி நிற்கக் கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் -35,000/=
தொடர்புகளுக்கு: 077 9370000, 075 498 5400

**வீடு வாடகைக்கு தேவை**
யாழ் நகரில் ஓய்வு பெற்ற ஆசிரிய குடும்பத்திற்கு ஏற்ற சிறிய வீடு வாடகைக்கு தேவை.
தொடர்புகளுக்கு: 077 744 4407

**சுத்திகரிப்பாளர் தேவை**
யாழில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் தேவை. (ஆண்/பெண்) இருபாலாரும் விரும்பத்தக்கது.
077 120 9972

**வீட்டுப் பணிப் பெண் தேவை**
கொழும்பில் உள்ள வீடொன்றில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
076 128 3990

**DMI JAFFNA**
A/L 2023
கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
ஆரம்பம் 02.10.2021
Zoom இன் ஊடாக நடைபெறும்.
தொடர்பு 077 848 0604

**ஆசிரியை தேவை**
யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதியில் வதியும் இரண்டாம் தரத்தில் (2021) கல்வி பயிலும் மாணவனுக்கு ஆங்கில பாடம் கற்பிப்பதற்கு ஆசிரியை (பெண்) தேவை. வீடு வந்து கற்பிப்பதற்கு உயர்தரம். பல்கலைக்கழக மாணவிகளும் விரும்பத்தக்கது. (வைத்தீஸ்வரா கல்லூரி அருகாமையில் அமைந்துள்ளது வீடு).
தொடர்பு: 076 896 0256

**வீடு வாடகைக்கு**
நாவலர் வீதி. யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகாமையில் 4 அறைகள். 3 Halls, 2 bathrooms (one is attached) 10 வாகனங்கள் தரித்து விடக் கூடிய இடப்பரப்புடைய வீடு வாடகைக்குண்டு. வீடு முழுவதும் மாபிள் பதிக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களுக்கு பொருத்தமானது. ஏனையோரும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு 077 921 5143

**வேலைவாய்ப்பு**
யாழ் நகரில் இயங்கிவரும் எமது புடவை காட்சியகத்தில் காணப்படும் பின்வரும் பணி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் வேண்டப்படுகின்றனர்.
01. தொடர்பாளர் (Customer care online)
02. விற்பனையாளர்
03. பொதி விநியோகிப்பவர். (Delivery boy)
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 855 4840

**விஸ்டம்**
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் பண்ணை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2023
தொழினுட்பப் பிரிவு
ZOOM செயலி ஊடாக
புதிய பிரிவு ஆரம்பம்
செப்ரம்பர் 30
காலை 8.01மணிக்கு
Engineering Technology & Bio Systems Technology
Science for Technology
ICT, Agricultural science, Maths(7)
ஏனைய தொகுதி பாடங்களும் நடைபெறும்.
நாட்டின் எப்பகுதியில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.
அனுமதியினைப் பெற கீழ் காணும் தொலைபேசி இலக்கத்தை அழைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கும் மற்றும் பதிவுகளுக்கும்:-
077 248 7774 / 076 552 9093 / 021 221 7869

**காணி விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி. ஆறுகால்மடம். இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 8 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)
ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.
076 221 2037, 077 288 0152, 076 734 1023

**மேற்பார்வையாளர், சமையலாளர் தேவை**
அன்னை கிருஷ்ணாபாய் மகளிர் இல்லத்தில் தங்கி நின்று வேலை செய்ய அனுபவமுள்ள பெண்மேற்பார்வையாளர் மற்றும் சமையலாள் தேவை.
வயதெல்லை 30 - 45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.
உடன் தொடர்புக்கு
021 222 8490, 021 721 0910



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.